

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## தை - மாசி

மலர் 12 ஜனவரி 2023 இதழ் 2

பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| வண்டு ஸ்தோத்ரம் | 6 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 9 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 12 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| பக்த மீராவின் கிருஷ்ண கீதங்கள் | 15 |
| மாசி மாத விசேஷ தினங்கள் | 17 |
| ராஜ தரங்கிணி | 18 |
| அத்வைத ஆசார்ய பரம்பரை | 22 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 27 |
| ஸ்ரீ பால போத ஸங்க்ரஹம் | 29 |
| அத்வைதமே பரமரகசியம் | 33 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 37 |
| திருமுறைத் தேன்துளிகள் | 38 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 39 |
| புராணக் கதை | 41 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 43 |
| மகாபாரத சுருக்கம் | 45 |
| சிவமானஸிக பூஜை | 47 |



भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்









# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of
Sri Kanchi Kamakoti Peetam,
No1, Salai Street, Kancheepuram - 631502.
Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

*இவ்வுலக இன்பமும், மேலுலக இன்பமும், ப்ரியமும், அதனால் எற்படும் ஆசையும், அனுபவமும், நல் மனதும் மங்களமும், உயர் நலமும், நல்ல வாஸஸ்தானமும், புகழும், ஸௌபாக்யமும், செல்வமும், வழிகாட்டும் ஆசார்யனும், தந்தை போன்று தாங்குபவனும், க்ஷேமமும், தைர்யமும், எல்லோருடைய அனுகூலமும், நல்லறிவும்,வெகுமானமும், போதனா சக்தியும், பணியாட்களை ஏவும் திறனையயும், மேழிச் செல்வத்தையும், இடையூறுகளின் ஒழிவையும், ஒழுங்கையும், சாகா நிலையையும், நீண்ட நோய்களின்மையும், குறுகிய நோயின்மையியும், நோயற்ற வாழ்வுக்கு மருந்தையும், நீண்ட ஆயுளையும் நண்பரில்லா தன்மையையும் அச்சமின்மையையும், சுகத்தையும், சயனத்தையும், நல் விடியலையும் நல் தினத்தையும் ஹே ருத்ரனே எனக்கு அருள்வாய்.*

*[ ஸ்ரீ ருத்ரம் சமகம்]*

*நிறைந்த யௌவனத்திலிந்த்ரிய விஷயங்களில் மூழ்கித் திளைத்தேனே*
*விவேகமில்லாமல் புத்ரன் கலத்ரம் பெண்டிர் என்று சுற்றி இளைத்தேனே !*
*அஹங்காரமாய் சுற்றித் திரிந்தேனே இமைப்பொழுதும் சிவ சிவ என்று*
*நினையாமல் அதி கர்வியாய் இருந்தேனே. சிவ சிவ சம்புவே இந்த என்*
*அபராதத்தைப் பொறுப்பாய்.*

*சிற்றம் சிறு காலையில் நீராடியபின் உனக்கு கங்கை ஜலம் கொணர்ந்தேனா*
*பூஜைக்காக பில்வ தளம் கொணர்ந்தேனா வாவியில் அன்ற*
*அலர்ந்த தாமரையைக் கொணர்ந்தேனா சிவ சிவ சம்புவே*
*இந்த என் அபராதத்தைப் பொறுப்பாய்.*

*லிங்க உருவில் அருள் புரிபவனே உன் மூர்த்திக்கு பால் அபிஷேகம் செய்தேனா! தேன், நெய், தயிர், அபிஷேகம் செய்தேனா! சந்தனம் அப்பினேனா.*

*மலரிட்டு பூஜை செய்தேனா நறுமணம் கமழ் தூபமிட்டேனா ! அறு சுவை உண்டி தந்தேனா! சிவ சிவ சம்புவே இந்த என் அபராதத்தைப் பொறுப்பாய்.*

*ஸ்ரீ சங்கரர் சிவ அபராத க்ஷமாபன ஸ்தோத்ரம்*

# ஆசிரியர் பக்கம்

# யாதும் ஊரே யாவரும் கேளிர்

யாதும் ஊரே யாவரும் கேளிர்' வஸுதைவ குடும்பகம்' இந்த இரண்டு வாக்யங்களும் ப்ரபலமானவை. பலரால் முக்யமாக அரசியல் பிழைத்தோரால் அடிக்கடி கோஷிக்கப்படுபவை. உரத்த சிந்தனை இல்லாமல் உரத்த கோஷமாக இருக்கும். உதட்டளவில் பேச்சு. உள்ளத்தளவில் சாரம் போச்சு.

ஒரு நல்ல குடிமகனுக்கு எல்லோரும் பந்துக்கள், எந்த நாடும் தன் தேசம், என்று புற நானூற்றுக் கவிதையில் புலவர் கணியன் பூங்குன்றனார் மொழிந்தது. இதே பொருளில் இந்த உலகம் முழுவதும் ஒரே குடும்பம் என்று ஒரு ஸ்லோகம் கூறும். கணியன் பூங்குன்றனாரின் முழுக்கவிதை பொருள் பொதிந்தது. பின்பு அதை விரிவாகக் காணலாம். உண்மையில் மக்களும் அவர்களை வழி நடத்தும் தலைவர்களும், பரந்த மனப்பான்மையில் உள்ளனரா? ஏற்கனவே உள்ள பேதங்கள் போறாது என்று புதுப்புதுப் பேதங்களை வளர்த்து திசை திருப்புவர் தலைவர்கள். மொழிச் சண்டை, தண்ணீர்ச் சண்டை, எல்லைச் சண்டை இன்னும் பலப்பல சண்டைகளை ஏற்படுத்தி மக்களை உணர்ச்சியுள் ஆழ்த்தி வன்முறையில் முடியச் செய்கிறார்கள்.

நிரம்பப் படித்தவர்கள் highly civilized people என்று கூறிக் கொள்ளும் மேனாட்டார் அதற்கு மேலேயே போகிறார்கள் அவர்களுக்கு international dispute இதில் தான் நாட்டம். தன்னலத்திற்காக பெரிய அளவில் நாடுகளை மோதவிட்டு ஆதாயம் தேடும் உலகமாக உள்ளது. **'மைத்ரீம் பஜத யுத்தம் த்யஜத ஸ்பர்தாம் த்யஜத'** என்னும் பெரியவா வாக்கு மைத்ரீம் த்யஜத; யுத்தம் ச ஸ்பர்தாம் பஜத' என்று விபரீதமாக போய் விட்டது. இது குறித்துக் கவலைப் படாமல் இருக்க முடியவில்லை. நல் வாழ்க்கைக்கு ஆதாரமான யாவரும் கேளிர் எங்கே போய்விட்டது?

ஒரே குடும்பமாய் இந்த உலகம் இருக்க ப்ரார்த்தனை எங்கே போய்விட்டது? யத்ர விஸ்வம் பவதி ஏக நீடம் ' (இந்த உலகம் ஒரே கூடில் வசிக்குமோ'') என்று வேதம் கோஷிக்கும். கவி தாகூர் கீதாஞ்சலியில் கூறுவார்.

Where the world has not been broken up into fragments by narrow domestic walls'

(குறுகிய எல்லைச் சுவர்களால் இந்த பரந்த உலகம் கண்ட துண்டமாக ஆக்கப்படாமல் இருக்கும் இடம் எதுவோ)

நாம் செய்ய வேண்டியது. பேதங்கள் பல இருப்பினும் அவை நிரந்தரமானவை அல்ல. ஒரே பரம் பொருள் பேதங்களின் உள்ளே அருள் புரிகிறார். பேதங்கள் மாயை. சில அவஸ்யத்திற்காக பேதங்கள் இருந்தாலும் அவைகளைத் தாண்டி யாவரும் கேளிர் எல்லோரும் நம்மவர் என்று உதார மனத்துடன் பழக வேண்டும். இளைய சமுதாயம் இந்த மனோ நிலையைக் கைக் கொள்ள வேண்டும். இது நம் நாட்டிற்கு மட்டுமல்லாமல் அனைத்து உலக இளைய சமுதாயத்திற்கும் பொருந்தும். இன்றைய நிலையில் இளைய சமுதாயம் மட்டுமல்ல அனைவருக்கும் இந்த பரந்த அறிவு வர வேண்டும்; ப்ரபோதம் வர வேண்டும். கணியன் பூங்குன்றனார் பாடலுக்கு இணையான ஸம்ஸ்க்ருத ஸ்லோகம் இதையே கூறும்.

**அயம் நிஜ: பரோ வேத்தி கணனா இதி லகு சேதஸாம்**
**உதார சரிதானாம் வஸுதைவ குடும்பகம்''**

இவன் நம்மவன் இவன் யாரோ இப்படி கீழ் நிலை மாந்தர் சொல்வர். ஆனால் உதார மனம் படைத்தவர்களுக்கு இவ்வுலகம் முழுவதும் ஒரே குடும்பம் எனவே பேதங்களை நிரந்தரமாக்காமல் பரந்த மனத்தர்களாய் உலகம் முழுதும் ஒரே குடும்பமாயிருக்கப் ப்ரார்த்திப்போம். கார்யத்தில் அதைச் செய்து காட்ட அனைவரும் உதார மனம் படைத்தவர்களாய் ஆவோம். பெரியவா சொன்ன மைத்ரீம் பஜத செய்வோம் யுத்தம் விடுவோம் ஸ்பர்தையை விடுவோம்.


மனிதனாய் இருப்போம். உதார சரிதர்களாய் இருந்து வழிகாட்டுவோம். வெறும் வெற்று கோஷங்களாயில்லாமல் உள்ளத்தளவில் அனைவரையும் மகா பெரியவா போல் அனைவரையும் நேசிப்போம். என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர! ஹர ஹர சங்கர!

# வண்டு ஸ்தோத்ரம்

### ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# கோவிந்த - ஹர நாமச் சிறப்பு



'கோவிந்த' என்கிற நாமம் ரொம்பவும் விசேஷமானது. ஈச்வர நாமாக்களுக்குள் 'ஹர' என்பதற்கும், விஷ்ணுவின் நாமாக்களுக்குள் 'கோவிந்த' என்பதற்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு.

ஸத்ஸங்கத்துக்காக, ஸத்விஷயத்துக்காகப் பல பேர் கூடினாலும், மநுஷ்ய ஸ்வபாவத்தில், கொஞ்ச நேரம் போனதும் கூட்டத்தில் பலர் பல விஷயங்களைச் சளசளவென்று பேச ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் பேச்சை நிறுத்தி பகவானிடம் மனஸைத் திருப்புவதற்கு என்ன செய்கிறோம்? யாராவது ஒருத்தர் 'நம: பார்வதீ பதயே' என்கிறார். 'உடனே, பேசிக் கொண்டிருந்த எல்லாரும் ஹர ஹர மஹா தேவ' என்கிறார்கள். அதற்கப்புறம் ஒரு பஜனையோ, உபந்யாஸமோ ஆரம்பிக்கிறது. இப்படிப் பல பேருடைய மனஸை ஈச்வரனிடம் லகான் போட்ட மாதிரி இழுக்கிற சக்தி ஹர நாமத்துக்கு இருக்கிறது ! **அரன் நாமமே சூழ்க, வையகமும் துயர் தீர்கவே** என்று ஞானசம்பந்தக் குழந்தை வாழ்த்திய விசேஷத்திலேயே இப்படி ஹரன் நாமத்துக்கு சிறப்பு ஏற்பட்டிருக்கிறது !

**'நம: பார்வதீ பதயே'** மாதிரியே இன்னொன்றும், ஒரு கூட்டத்தின் மனஸை பகவத் பரமாகத் திருப்பி விடுவதற்காக கோஷிக்கப்படுகிறது. அதுதான் 'ஸர்வத்ர கோவிந்த நாம ஸங்கீர்த்தனம்' என்பது. இப்படி ஒருத்தர் சொன்னவுடன் கூட்டம் முழுவதும் 'கோவிந்தா கோவிந்தா' என்கிறது. 'பஜகோவிந்தம்' என்று நம்முடைய ஆசார்யாள் குழந்தையாய் இருந்த போதே சொன்னதன் மஹிமை !

'அண்ணாமலைக்கு அரோஹரா' என்று லக்ஷோபலக்ஷம் பக்தர்கள் சேர்ந்த பொழுது கோஷிக்கிறோம். காவடி எடுக்கிற போது ஸுப்ரமணிய ஸ்வாமிக்கும், அரோஹரா, போடுகிறோம். அரநாமமே சூழ்கிறது. இப்படியே நித்ய உத்ஸவமாக இருக்கிற திருப்பதியில் லக்ஷோபலக்ஷம் ஜனங்களும் 'கோவிந்தா' போட்டுக் கொண்டே தான் மலையேறுகிறார்கள்.

இரண்டு தெய்வக் குழந்தைகளின் வாக் விசேஷம் !

ஹர நாமத்தைவிடக் கூட கோவிந்த நாமாவுக்கு ஜாஸ்தி விசேஷம் தோன்றுகிறது. ஒருத்தர் 'பார்வதீ பதி'யைச் சொன்ன பிறகு தான் மற்றவர்கள் 'ஹர ஹர' என்கிறார்கள். ஆனாலும் கோவிந்த நாம விஷயமாகவோ, முதலில் சொல்கிற ஒருத்தரும் 'ஸர்வத்ர கோவிந்த நாம ஸங்கீர்த்தனம்' என்று இந்தப் பெயரையேதான் கோஷிக்கிறார். மற்றவர்களும் அதே நாமாவைத் திருப்புகிறார்கள்.

இன்னொன்று கூட : தீவிர வைஷ்ணவர்கள் ஹர நாமாவை கோஷிப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால் கோவிந்த நாமாவை ஸகலருமே சொல்வார்கள். அதனால்தான் போலிருக்கிறது இதற்கு மட்டும் 'ஸர்வத்ர' என்று. அதாவது எல்லா இடத்திலும், எல்லாக் காலத்திலும் என்று அடைமொழி கொடுத்திருக்கிறது. 'ஸர்வத்ர' கோவிந்த நாம ஸங்கீர்த்தனம் ! அதனால், என்னை யாராவது ஹிந்து மதத்தில் ரொம்ப ரொம்ப விசேஷமான நாமா எது என்று கேட்டால் 'கோவிந்தா' தான் என்று சொல்வேன்.

ஸர்வலோக சக்ரவர்த்தியாக இருக்கப்பட்ட பகவான் பரம கருணையோடு பரம எளிமையோடு, வந்து மாடு மேய்த்து, கோபர்களையும் (ஆயர்களையும்), கோபிகளையும், அத்யந்த ப்ரேமையோடு அநுக்ரஹித்த அவஸரத்திலேயே அவருக்கு கோவிந்த நாமா ஏற்பட்டது. இந்த நாமா ஏற்பட்ட வ்ருத்தாந்தத்தை பாகவதம் சொல்கிறது. உத்த்ருதநக' ச்லோகத்தில் refer செய்த வ்ருந்தாந்தம்.

'தான் மழை பெய்வதால் தானே லோகம் உயிர் வாழ்கிறது ? என்ற கர்வம் இந்த்ரனுக்கு எற்பட்டது. அப்போது க்ருஷ்ணன் கோகுலத்தில் குழந்தையாக இருந்த ஸமயம். அவர் இந்த்ரனுக்கு புத்தி கற்பிக்க எண்ணினார். அதனால் கோபர்களிடம், அவர்கள் வழக்கமாகச் செய்யும் இந்த்ர பூஜையை நிறுத்திவிட்டு, அதற்கு பதிலாக கோவர்த்தன கிரிக்கு பூஜை பண்ணச் சொன்னார். அதே போலச் செய்தவுடன் இந்த்ரனுக்கு ஒரே ஆத்திரமாக வந்தது. அந்த ஆத்திரத்திலே கோகுலத்தையே அடித்துக் கொண்டு போய் விடுகிறார் போல் பெரிய மழையைக் கொட்ட ஆரம்பித்து விட்டான். அந்த ஸமயத்தில் தான் பகவான் கிரிதர கோபாலனாக கோவர்த்தன மலையைத் தூக்கி, மழையைத் தடுத்து, தீன ஜனங்களையும் பசு முதலான ப்ராணிகளையும் ரக்ஷித்தார். பிறகு தேவேந்த்ரனே

மழை பெய்ய முடியாமல் களைத்துப் போய் அவரிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, ஸகல உயிர்களையும் (கோ என்பது பசுவை மட்டும் குறிக்காமல் எல்லா ஜீவராசிகளையும் குறிப்பதாகும். பசு என்பதும் எல்லா ப்ராணியையும் குறிப்பது போல! இப்படி எல்லா உயிர்களையும்) ரக்ஷிப்பவர் அவர் தான் என்று அர்த்தம் தொனிக்கும்படியாக கோவிந்த என்று அவருக்குப் பட்டம் சூட்டி, அபிஷேகமும் பண்ணி வைத்தான். அதனால் இந்த கட்டத்திற்கு கோவிந்த பட்டாபிஷேகம் என்றே பெயர். கோக்களுக்கு 'இந்த்ரன்' கோவிந்தன் விந்த என்றால் ஒன்றைத் தேடி, நாடிப் போய் அடைவது. பசுக்கள் இப்படி க்ருஷ்ணனிடமே உயிராயிருந்து அவரைத் தேடி அடைந்ததால் கோவிந்தன். 'கோ' என்பது பசுவை மட்டுமில்லாமல் பூமி, ஆகாசம், வாக்கு, இந்த்ரியங்கள் ஆகியவற்றையும் குறிப்பது. இவையெல்லாம் தேடிப் போய் அடையும் லக்ஷ்யமான பரமாத்மா அவர் என்பதையும் கோவிந்த நாமம் தெரிவிக்கிறது.

(தொடரும்)

## வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram
A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN NO ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> phone : 24740549

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

# ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது !


சிறு வயது முதல் கல்வி கற்பது தமது வழக்கத்தில் இருந்து வருகிறது. கல்வி கற்பதன் பலன் அதன்படி நடக்க வேண்டும். கடவுளின் திருவடியையும் மறந்து விடக் கூடாது.

நல்ல மாணவர், நல்ல மாணவி என்ற பெயர் எடுக்க வேண்டும். அந்தக் காலத்தில் கல்வியோடு சேர்த்து பக்தியையும் சொல்லிக் கொடுத்தார்கள். இன்றுள்ள கல்விச் சூழ்நிலையில் நல்ல மாணவர்களை உருவாக்குவது சிரமம்.

இன்றுள்ள சமுதாயச் சூழ்நிலை, குடும்பச் சூழ்நிலை நல்ல மாணவர்களை உருவாக்கக் கூடியதாக இல்லை.

வருங்காலத்திற்கு நல்ல மாணவர்களை உருவாக்க வேண்டியது அவசியம். அப்படிப்பட்ட மாணவர்களை உருவாக்குவதால் நூறாண்டு, ஆயிரம் ஆண்டு என்று விழாக்கள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும்.

தீபத்தை ஏற்ற வேண்டும். தீபம் இருளை அகற்றும். கல்வி அறியாமையை அகற்றும்.



மனதில் உள்ள அறியாமை, படிப்பின்மை, பிற்பட்ட கெட்ட உறவுகள் - இவைகளையெல்லாம் நீக்குவதற்காகத்தான் கல்வி வேண்டும்.

வெறும் பொருளுக்காக, ஏட்டுப் படிப்பாக இல்லாது, வாழ்க்கைக்காக உதவும் படிப்பாக இருக்க வேண்டும்.

ஆண்டுதோறும் பிள்ளைகள் அடுத்தடுத்த வகுப்புகளுக்குப் போவது போல் நம் வாழ்க்கையிலும் உயர்ந்த நிலைக்கு மாறிமாறிப் போய்க்கொண்டே இருக்க வேண்டும்.

வாழ்க்கைக்கு உதவும் முறையில் படிப்பது தான் உண்மையான படிப்பு. ஆண்டுதோறும் உயர்தரமான பண்போடு கூடிய படிப்புதான் நமக்கு கிடைக்க வேண்டும்.

இளமையில் கல் என்பார்கள். அதுபோல நாம் இளமையிலேயே கற்க வேண்டும். எல்லா அறியாமைகளும் நாம் தெளிவு பெறப் பெற விலகுகிறது. நம்முடைய புத்தியில் உள்ள குழப்பங்கள் எல்லாம் விலகுவதற்கு உதவியாக இருப்பது கல்வி.

'கசடறக் கற்க' என்றார் திருவள்ளுவர்.

குழப்பம் இல்லாதபடி படிக்க வேண்டும். நல்ல சிந்தனையை உருவாக்கும் கல்வியைப் படிக்க வேண்டும்.

புத்தகத்தைப் படித்து மனப்பாடம் செய்வது என்பது மட்டும் அல்லாது, புத்திக்குப் பயன் அளிக்கும் வகையில் கல்வி பயில வேண்டும்.

நம்முடைய கல்வியால் நல்ல மாணவனை உருவாக்க வேண்டும். அதன் மூலம் நல்ல மனிதனை 'குட் பாய்', 'குட் கேர்ள்' என்பது பள்ளியோடு முடிந்து போகாமல் 'குட் மேன்', 'குட் உமன்' என்று வளர்ந்த பிறகும் சொல்லும் படியாக இருக்க வேண்டும்.

நல்ல மனிதன் என்ற பெயர் எடுப்பதற்கு நிலையான, தரமான கல்வி தேவை. அதற்காகத் தான் கல்விச் சாலைகள் தோன்றின.

பாண்டிச்சேரியிலே மூன்று கல்வி மையங்கள் சங்கர வித்யாஸ்ரமத்தின் கிளைகளாக இருக்கின்றன. தமிழகம் முழுவதும் பல ஜில்லாக்களில் பள்ளிகளைத் துவக்கி, பத்துப் பன்னிரண்டு வருடங்களாக நடத்தி வருகிறோம்.

சென்னை தாம்பரத்திலே, அடையாரிலே, திருவான்மியூரிலே, பம்மலிலே கூட இருக்கிறது.

காஞ்சிபுரத்திலே மூன்று பள்ளிகளும், ஒரு கல்லூரியும், ஒரு பல்கலைக் கழகமும் இருக்கிறது. இந்தியக் கலாச்சாரத்தை மையமாக கொண்டு அந்தப் பல்கலைக் கழகம் செயல்பட்டு வருகிறது.

கடலூரிலே செங்குறிச்சி என்ற கிராமத்திலே ஒரு பள்ளியும், விழுப்பூரிலே ஒரு பள்ளியும் நடைபெற்று வருகிறது. வண்டலூரிலேயும், ஊரப்பாக்கத்திலேயும் பள்ளிகள் நடைபெறுகிறது.

கொடைக்கானல், கும்பகோணம், திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடியில் பள்ளிகள் நடைபெறுகின்றன.

கோயம்புத்தூரிலே பெண்கள் கல்லூரியும் மற்றும் எல்லோருக்குமான பொதுப் பள்ளிகளும் நடைபெறுகிறது.

இந்த ஆண்டு ஐந்து பள்ளிகளைப் புதிதாகத் திறந்திருக்கிறோம். ராஜபாளையம் கிராமத்திலே ஒன்று, நம் முன்னோர்கள் பிறந்த ஊரான ஆதித்தபுரத்திலே ஒன்றும், கிருஷ்ணகிரிக்குப் பக்கத்து கிராமத்திலே ஒன்றும் துவங்கப்பட்டுள்ளது.

இப்படியாக ஏராளமான கல்வி நிறுவனங்கள் மூலம் நல்ல நல்ல மாணவர்களை உருவாக்கி, அவர்களை நல்ல நல்ல மனிதர்களாக மாற்றும் லட்சியத்துடன் செயல்பட்டு வருகிறோம்.

இதே போல மருத்துவமனைகளும் ஜில்லா ஜில்லாவாகத் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

கடவுள் அருளால் இப்படிப்பட்ட நிறுவனங்களின் மூலம் அவர்கள் புத்திசாலிகளாக வளர வேண்டும். வெறும் கல்வியால் மட்டுமல்ல - கடவுள் அருளால் நல்ல ஆரோக்கியமும் - மருத்துவமனைகள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

கடவுள் அருளால் - அற வழியிலும் கல்வி வழியிலும் மக்கள் மேன்மையடைய வேண்டும். அப்படி வளர்ந்தால் தான் நாடு சுபிட்சமாகும்.

மக்கள் இல்லாமல் நாடு இல்லை. ‘நாடு கெட்டு விட்டது என்றால் மக்கள் கெட்டு விட்டார்கள் என்று அர்த்தம். மக்களைத் திருத்தினால் நாடும் திருந்தி விடும்.’ செய்ய வேண்டிய பணிகள் நிறைய இருக்கிறது.

மன்னார்குடியில் பெண்களுக்காக ஒரு பள்ளி நடைபெற்று வருகிறது. விழுப்புரத்திலேயும் நடைபெறுகிறது.

மாணவர்களுக்குப் பண்பாடு, கலாச்சாரத்தைப் போதிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இப்பள்ளிகள் துவங்கப்பட்டன. ஒரு மனிதனுக்குக் கல்வி சரியாக இருந்தால் அவன் நல்ல மனிதனாக வளருவான்.

கல்வி சரியாக இல்லை என்றால் அவன் நல்ல மனிதனாக மாற வாய்ப்பே இல்லை. அதை வைத்துத் தான் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வளர்த்து வருகிறோம்.

இந்தக் கல்விப் பணி சீரும் சிறப்புமாக வளர அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் ஒரு காரணம். பாண்டிச்சேரி அரசாங்கம் கேட்கும் உதவிகளையெல்லாம் இதற்குச் செய்து வருகிறது. எம்.பி. அவர்கள் பரந்த நோக்கோடு பலவிதமான உதவிகளைச் செய்து வருகிறார். அவர்கள், நாம் இடம் அளித்தால் கட்டிடம் கட்டித் தருகிறோம் என்கிறார்கள். அதன்படி நாங்களும் இங்கே பூமியைக் கொடுக்க முன் வருகிறோம்.

ஜெய ஜெய சங்கர
ஹர ஹர சங்கர

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

*(விசாகபட்டினத்தில் பெரியவா அவர்களின் முகாம் சமயம் மகர சங்கராந்தி - பொங்கல்- விசேஷ அனுக்ரக பாஷணம் -14/01/2023)*

**ஆதித்யஹ்ருதயம் புண்யம் ஸர்வசத்ரு விநாசனம்**
**ஜயாவஹம் ஜபேன்நித்யம் அக்ஷய்யம் பரமம் சிவம்**
**ஸர்வமங்கல மாங்கல்யம் ஸர்வபாப ப்ரணாசனம்**
**சிந்தாசோக ப்ரசமனம் ஆயுர்வர்த்தன முத்தமம்**
**ரச்மிமந்தம் ஸமுத்யந்தம் தேவாஸுர நமஸ்க்ருதம்**
**பூஜயஸ்வ விவஸ்வந்தம் பாஸ்கரம் புவனேஸ்வரம்**
**ஆரோக்யம் பாஸ்கராத் இச்சேத் ।।**



என்று கூறுகிறார்கள். மக்கள் அனைவருக்கும் நல்ல ஆரோக்கியம், வயது, புஷ்டி தருபவர் சூரியர். ப்ரத்யக்ஷ தெய்வம் என்று நாம் அனைவரும் பூஜிக்கின்றோம். வீட்டில் ப்ரத்யக்ஷ தெய்வமாக தாய் உள்ளார்கள். உலகத்தில் ப்ரத்யக்ஷ தெய்வமாக சூர்ய நாராயணர் உள்ளார். மனதில் உள்ள வெறுப்பு, விருப்பு அனைத்தையும் விலக்கி, திருப்தி, சந்தோஷம், உற்சாகம் அனைத்தையும் அளித்து, உலக சந்தோஷம் அளிப்பவராக உள்ளார் சூரிய நாராயண ஸ்வாமி- ஸூர்யோ நமஸ்கார பிரிய: என்றும் சிவ பெருமானுக்கு அபிஷேகம் செய்கிறோமோ - **சிவோ அபிஷேகப் ப்ரிய:** என்றும் **அங்காரப் ப்ரிய: விஷ்ணு:** என்றும் வெங்கடேஸ்வர ஸ்வாமிக்கு அலங்காரம், அர்ச்சனை செய்து அனுக்ரகம் பெறுகிறோமோ, அது போல, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், சங்கராந்தி அன்று, ரத சப்தமி அன்று, பானு சப்தமி போன்ற பருவ காலத்தில், தக்ஷிணாயன உத்தராயண புண்ய காலத்தில் ஒவ்வொரு நாளும் கூட நமஸ்காரம் செய்து,

ஓம் மித்ராய நமஹ ஓம் ரவயே நமஹ
ஓம் சூர்யாய நமஹ ஓம் பானவே நமஹ

ஓம் ககாய நமஹ
ஓம் ஹிரண்யகர்ப்பாய
ஓம் ஆதித்யாய நமஹ
ஓம் அர்க்காய நமஹ
ஓம் பூஷ்ணே நமஹ
ஓம் மரீசயே நமஹ
ஓம் சவித்ரே நமஹ
ஓம் பாஸ்கராய நமஹ என்று

மக்கள் அனைவரும் நமஸ்காரம் செய்து, தேஜஸ், காந்த சக்தி சூர்ய உபாசனை மூலம் நமக்கு கிடைக்கிறது. சங்கராச்சாரியார்க்கு **ஷண்மதஸ்தாபனாசார்யாய நம:** என்ற ஒரு பெயர் உண்டு. காணாபத்யம், சைவம், சாக்த்யம், வைஷ்ணவம். கௌமாரம், சௌரம் என்று வழிபாடுகளை வகுத்து பிரசாரம் செய்தார்.

நமது பாரத தேசத்தில் தெற்கில் இருந்து ஆரம்பித்து வடக்கு வரை அநேக பிரசித்தி பெற்ற சூரிய ஆலயங்களை நாம் பார்க்கிறோம். சூரிய நாராயணர் கோவில் தஞ்சாவூரில் மிக பிரசித்தி பெற்ற கோவிலாக திகழ்கிறது. ஆந்திர தேசத்தில் அரிசிவில்லி என்ற பிரசித்தி பெற்ற கோவில் உள்ளது. அருகில் கோனார்க் போன்ற ஆலயங்கள், திரிபுரா பிராந்தியத்தில் திலக் என்ற ஒரு கோவில் மற்றும் பல பாஸ்கர க்ஷேத்திரங்கள் உள்ளன.

முக்கியமான பல க்ஷேத்திரங்களை பாஸ்கர க்ஷேத்திரம் என்கிறார்கள். காஞ்சி வந்து சர்வ தீர்த்த குளத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும் என்றால், பாஸ்கர க்ஷேத்ரே என்று சங்கல்பம் செய்து வைக்கிறார்கள். ஆக, சூர்ய உபாசனா ரிக் வேதத்தில் சௌர மந்திரங்கள் , கிருஷ்ண யஜீர் வேதத்தில் சூர்ய நமஸ்காரம் என்றும், சாம வேதத்தில் கூட சூரிய மந்திரங்கள் என்று பல வேதத்தில் சூர்ய உபாசனை மந்திரங்கள் உள்ளன. எவ்வாறு மஹா விஷ்ணுக்கு எட்டு எழுத்து மந்திரம் உள்ளதோ, சிவனுக்கு பஞ்சாக்ஷரம் உள்ளதோ, அதே போல் சூரியனுக்கும் உபாசனை மந்திரம் உள்ளது. மந்திர சித்தி மூலம் மக்களுக்கு நல்லது பெருகுகிறது. இந்த உத்தராயண புண்ணிய காலத்தில், சங்கராந்தி புஷ்கரம் கங்கா சாகரத்தில் செய்கிறார்கள். புண்ணியமான கங்கா நதி, கடலில் சங்கமிக்கும் இடம் கங்கா சாகர க்ஷேத்திரம். **குருதே கங்கா சாகர கமனம்** என்று சங்கராச்சாரியார் கூறுகிறார். அருணாச்சல பிரதேசத்தில் உள்ள பரசுராம குண்டம் க்ஷேத்திரத்தில் இந்த மகர சங்கராந்தி லோகித நதியில் ஸ்நானம் நடைபெறுகிறது. தேச அளவில் உள்ளது இந்த சௌரம் என்ற பததி, வழிபாடு.

பக்தர்கள் அனைவரும் இந்த சங்கராந்தி சமயம், அவரவர்கள் வீட்டில் சம்ப்ரதாயம் அனைத்தும் கடைபிடித்து, பொங்கல் படைத்து, சூரிய ரதம் கோலம் இட்டு கொண்டாடுவோம். நமது பிரச்சனைகள், கவலைகள் அனைத்தும் தீர்ந்து, அனைவருக்கும் நல்ல சமாதானம் மனதில் ஏற்படவேண்டும். உத்தராயணத்தில் மனிதர்கள் மட்டுமல்லாமல், **சந்நோ அஸ்து த்விபதே சம்சதுஷ்பதே** என்று வேதம் கூறுகிறது. காமதேனு ஸ்வரூபம் உள்ள பசுக்களை ஆராதனை செய்யும் சந்தர்ப்பம்

கிடைக்கிறது. பெரியவர்களை கௌரவித்தல், அறிஞர்களை நமஸ்கரித்தல் நமது தேசத்தின் கலாச்சாரம்.

சங்கராந்தி ஆரம்பித்து கொஞ்ச நாட்களில் நமக்கு ஒரு சமஸ்க்ரித சப்தாஹம் போல் தெரிகிறது. பூமியை சம்ரக்ஷணம் செய்தல், பெரியவர்களை கௌரவித்தல், ஜீவ காருண்யம்; முக்தி என்பது சம்சார வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்க வேண்டும். ஞான ப்ராப்தி என்பதுஅனைவருக்கும் ஒரே நாளில் உடனே கிடைத்து விடாது. அப்யாசம், ஆவ்ரித்தி செய்ய வேண்டும். அதற்கு அன்னம் என்பது முக்கியம் அதற்கு விவசாயம் முக்கியம் - **சஹஸ்ரகுண முத்ஸ்ரஷ்டும் ஆதத்தே ஹி ரஸம் ரவி** - நீரை மேலே கிரகித்து, மழையாக தருகிறார். அது போல் நமது தேசத்தில் - **சஸ்ய ஸம்ரிதி -தேஸோயம் ஷோப ரஹித: -பிரதிவி சஸ்ய சாலினி** -பருப்பு, அரிசி, கொப்பரைக் காய் எதாக இருந்தாலும் , அனைவருக்கும் கிடைக்க வேண்டும் -இந்த சம்சார வாழ்க்கைக்கு முக்கிய காரணமாக இருக்கும் சக்தி சூரிய சக்தி. இதைத் தவிர அவர் கல்வியைக் கூட கற்றுத் தருகிறார். மூல சக்தி உண்டு. அதன் பின் நாம் சாதனை மூலம் ஆத்ம சக்தி பெறுகிறோம். யுக்தி முதல் முக்தி வரை, உபாசனை செய்தவர்கள் **-தேயஸ் சதா ---நாராயண: சரசி சாசன சன்னி விஷ்ட: - கேயூரவான் ---தரித சங்கு சக்ர:** -என்று சூரியனை தியானம் செய்து , காலையில், மத்யானம், மாலை சாயந்திரம் **-உத்யந்து வஸ்து ---ஆதித்யம் -ப்ராம்மணோ வித்வான் சகலம் பத்ரமஸ்நுதே** - என்று கூறி பத்திரமான வாழ்க்கை, இன்பகரமான வாழ்க்கை, நல்ல புத்தி உடைய வாழ்க்கை கிடைக்க நாம் நினைக்கிறோம். ஆக, யுக்தி, முக்திக்கு காரணமாக பிரத்யக்ஷமாக உள்ள - மற்றவர்களை மந்திரம் மூலம், தந்திரம் மூலம் பிரார்த்தனை செய்கிறோம். சுலபமாக தெரியும் பகவான், நண்பன் இந்த சூரியன். இந்த புண்ய காலத்தில் சூரிய உபாசனை பக்தர்கள் அனைவரும் செய்து - விபரே ராம ரசம் என்பது போல், ஆனந்த ரசம் அனைவருக்கும் கிடைக்க , அதன் மூலம் அனைவருக்கும் சுகம், சாந்தி கிடைக்க அந்த இறைவனை பிரார்த்தித்து, இந்த சுப நாம வருஷத்தில் - கல்யாணம், சுபம், மங்களம் - என்று அனைவருக்கும் நல்லது நடக்க வேண்டும் என்று -ஆதித்யாது ஸ்ரீ ருத்ரம் என்று - **ஆதித்யாய ச சோமாய மங்களாய புதாயச குரு சுக்கிர சனிப்யச்ச ராகவே கேதவே நம:'** சூரியன் நவக்ரஹ பூஜையில் முக்கியமான தெய்வம். அவரே மத்திய கிரகமாக உள்ளார் நவக்ரகத்தில். அம்மாதிரியான சூரியனை அனைவரும் பூஜித்து நலம் பெற வேண்டும்.

ஹர ஹர சங்கர, ஜெய ஜெய சங்கர

# பக்த மீராவின் க்ருஷ்ண கீதங்கள்



ராகம் மிஸ்ர காபி

மனே சாகர் ராகோஜீ மனே சாகர் ராகோஜீ
மனே சாகர் ராகோஜீ
சாகர் ரஹஸூம் பாக் லகாஸூம் நித உட டர்சன் பாஸூம்
வ்ருந்தாவன் கீ குஞ்ச கலின மேம் தேரீ லீலா காஸூம்
மனே சாகர் ராகோஜீ ॥

மோர் முகுட பீதாம்பர் ஸோஹே கல் பைஜந்தீ மாலா
வ்ருந்தாவன் மேம் தேனு சராவே மோஹன் முரலீ பாலா
மனே சாகர் ராகோஜீ
ஜோகீ ஆயா ஜாகே கரன் கூ தப கரணே ஸன்யாஸீ
ஹரி பஜன் கூ ஸாது ஆயோ வ்ருந்தாவன் கே பாஸீ
மனே சாகர் ராகோஜீ ॥

எரா கே ப்ரபு கஹிர் கம்பீரா ஹ்தய ரஹோ ஜீ தீரா
ஆதீ ராத் ப்ரபு தர்ஸண் தைஹேம் ப்ரேம நதீ கே தீரா
மனே சாகர் ராகோஜீ ॥

தேவனே என்னை உன் தாஸனாக்கு. என்னை உன் தாஸனாக்கு. உன் தாஸனாய் உன் நந்தவனத்தைப் பரிபாலிப்பேன். விடியலில் எழுந்து உன் முகத்தாமரையை தர்சிப்பேன் வ்ருந்தாவனத்தின் காடுகளில் அன்று இவ்வுலகம் அளந்தாய், குன்று குணிலாய் எறிந்தாய், கஞ்சன் வயிற்றில் கனலென நின்றாய், செங்கட் சீயமாய் உதித்தாய் என்று உன் புகழ் பாடுவேன்.

க்ருஷ்ணா! என்னை உன் தாஸனாக்கு. சிரத்தில் மயிற் பீலி, பீதாம்பரதாரி தோளில் வைஜயந்தீ மாலை, கரத்தில் வேய்ங்குழல் மனதை மயக்கும் யோகிகள் யோகம் செய்ய வருவர், தபஸ்விகள் தவம் செய்ய வருவர்.

ஸாதுக்கள் உன் பஜனை செய்ய கூடுவர். தேவ! என்னை உன் தாஸனாக்கு. மீராவின் தலைவன் மகிமை பொருந்தியவன். மனமே பொறுமையாகவும் அச்சமின்றி இரு. நடு நிசியில் யமுனையின் கரையில் என் தேவன் தோன்றுவான். தேவனே என்னை உன் தாஸனாக்கு. தேவனே என்னை உன் தாஸனாக்கு.


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

*அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.*

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.




ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# மாசி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 13-2-2023 | திங்கள் | கலவை ஸ்ரீபாராத்பரகுரு ஆராதனை - 66 வது ஆசார்யாள் |
| 14-02-2023 | செவ்வாய் | அனுஷம் வேத பாராயணம் ; அனுஷம் தேர் |
| 16-02-2023 | வியாழன் | மூலம் வேத பாராயணம் ; மூலம் தேர் ; ஏகாதசி |
| 17-02-2023 | வெள்ளி | உத்ராடம் தேர் ; த்வாதசி |
| 18-02-2023 | சனி | ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் ஜயந்தி ; மஹா சிவராத்திரி உத்ராடம் வேத பாராயணம் ; சனி ப்ரதோஷ பூஜை |
| 19-02-2023 | ஞாயிறு | அவிட்டம் தேர் |
| 20-02-2023 | திங்கள் | அவிட்டம் வேத பாராயணம், கலவை ஸ்ரீ பரமேஷ்டி குரு ஆராதனை - 67வது ஆசார்ய ஸ்வாமிகள் |
| 26 -2 -23 | ஞாயிறு | பானு ஸப்தமி |
| 03-03-2023 | வெள்ளி | ஏகாதசி |
| 04-03-2023 | சனி | ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் ஆராதனை ; த்வாதசி ; சனி ப்ரதோஷ பூஜை |
| 06-03-2023 | திங்கள் | மாசி மகம் ; பௌர்ணமி பூஜை |
| 11.3.23 | சனி | ஸ்வாதி வேத பாராயணம் |
| 13.3.23 | திங்கள் | அனுஷம் வேத பாராயணம், அனுஷம் தேர் |
| 17-02-2023; 24-02-2023; 03-03-2023; 10-03-2023 | | வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுர சுந்தரி சமேத ஸ்ரீசந்த்ர மௌலீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை |

# ராஜதரங்கிணி - 1

பி. ஆர். கண்ணன்

## முன்னுரை

ராஜதரங்கிணி என்கிற பிரஸித்தி பெற்ற ஸம்ஸ்க்ருத காவியம் கல்ஹணர் என்கிற காஷ்மீர அந்தணப் புலவராலே 12ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது. காஷ்மீரும், அதையொட்டிய பாரதத்தின் வடமேற்கு பாகத்தினுடையதுமான வரலாற்றைப் பற்றியது. ராஜதரங்கிணி என்றால் அரசர்களின் நதி என்று பொருள்படும். மஹாபாரத காலத்திலிருந்து கி.பி. 1148 வரை வரிசையாக காஷ்மீர அரசர்களின் வரலாற்றை, இயற்கை, தார்மீகம் போன்ற அம்சங்களை வலியுறுத்தி, அழகிய ஸம்ஸ்க்ருத செய்யுள் வடிவத்தில் கவிஞர் வழங்கியுள்ளார். பாரததேசத்தினுடைய வரலாற்றினையே ஆக்கிய முதல் ஆசிரியராக கல்ஹணரை அறிஞர்கள் கொண்டாடுவர். கல்ஹணரின் தந்தை, சம்பகர், காஷ்மீர ராஜா ஹர்ஷர் அரசவையில் மந்திரியாக விளங்கியவர். ராஜதரங்கிணி 8 தரங்கங்கள், அதாவது, அத்தியாயங்களையும், 7826 ஸ்லோகங்களையும் உள்ளடக்கியது. ஒவ்வொரு தரங்கத்தின் ஆரம்பத்திலும் சிவபெருமான், அதிலும் முக்கியமாக அர்த்தநாரீஸ்வரரைப் பற்றிய துதி உள்ளது.

காஷ்மீர ராஜாக்களைப்பற்றிய ஒரு அழகிய சித்திரத்தை கல்ஹணர் நமக்கு வழங்குகிறார். அவர்களின் வரலாறு, அரசியல் சூழ்ச்சிகள், அரண்மனை விவகாரங்கள், உட்பகை, போர்கள், ராஜாக்களின் ஸனாதன தர்மப்பற்று, நாட்டுமக்களுக்கு ஆற்றிய ஸேவை ஆகிய எல்லாவற்றையும் படம் பிடித்துக் காட்டுகிறார். காஷ்மீர அரசர்கள், அரசிகள், மந்திரிகள், முக்கியஸ்தர்கள், சாதாரணக்குடிகள் ஆகியவர்கள் கட்டிய கோவில்கள், மடங்கள், அக்ரஹாரங்கள், புத்த விஹாரங்கள், சைத்யங்கள் முதலியவற்றையும், சேனைபலம், நீரூற்றுகள், நதிகள், நீர்ப்பாசன முறைகள், கால்வாய்கள், சாலைகள், மற்றும் பொதுநல அமைப்புகள் ஆகியவற்றையும் வர்ணித்துள்ளார் கவிஞர். காஷ்மீரில் புத்தமதத்தின் ஊடுறுவலையும், யவன (க்ரேக்க), மற்றும் ம்லேச்ச (இஸ்லாமிய) படையெடுப்புகளையும் கவிஞர் குறிப்பிடுகிறார். ஸனாதன தர்மத்தின் வலுவான வழி நின்று, இயற்கையை பாங்குற வர்ணித்து, நதிகள், குன்றுகள், நீரூற்றுகள், மற்றும் பல இயற்கைக் காட்சிகளையும், ராஜாக்கள், மந்திரிகள், அவர்களின் குடும்பங்கள் ஆகியோரின் நல்ல, தீய குணங்கள், செயல்களையும் எடுத்துரைக்கையில், கவிஞர் சாஸ்த்ரங்கள், புராணங்கள், ஸ்தலத்தின் செவிவழி

காதைகள் ஆகியவற்றை உதாரணம் காட்டுகிறார். அடிக்கடி நீதிகள், புலன்களுக்கு அப்பாற்பட்ட காரண, காரியங்கள் முதலியவற்றை சுட்டிக்காட்டி, ஒரு அழகான காவியத்தைப் படைத்துள்ளார்.

**ஸிந்து, விதஸ்தா** (தற்போதைய ஜீலம்) ஆகிய இரு முக்கிய நதிகள் காஷ்மீரில் ப்ரவஹிக்கின்றன; அவை ரிக்வேதத்திலேயே சொல்லப்பட்டவை. ராஜதரங்கிணியிலும், பழைய காஷ்மீர் புராணங்களாகிய ப்ருங்கீஸ ஸம்ஹிதை, நீலமத புராணம் ஆகியவற்றுள்ளும் ஸிந்து, விதஸ்தா உள்பட பல தீர்த்தங்கள், ஆலயங்கள், நீரூற்றுகள், நதிகள் முதலானவை விரித்துரைக்கப்பட்டுள்ளன. **காஷ்மீரிலுள்ள சிவன், விஷ்ணு, தேவி கோவில்கள்** - ராஜாக்கள், மற்றோர் கட்டியவை - சில சக்தி பீடங்கள் உள்பட- இந்நூல்களில் காணக் கிடைக்கின்றன.

இக்கட்டுரைத் தொடரில் வரிசைக்ரமமாக காஷ்மீர் ராஜாக்களின் ஆட்சியில் கலாசார, ஆன்மீக, சமய வளர்ச்சிகளின் போக்கு பற்றிய விஷயங்களை ராஜதரங்கிணியில் கூறிய வண்ணம் சுருக்கமாகப் பார்ப்போம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடத்திற்கும், காஷ்மீரத்திற்கும் உள்ள ஸம்பந்தங்கள் வெகு புராதனமாகவும், நெருக்கமாகவும், தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டும் இருப்பது பலர் அறியாதது. ஆதிசங்கரர் காஷ்மீர் சென்று, ப்ரஸித்திபெற்ற சாரதாபீடத்தின் சாரதா கோவில் (தற்போது பாகிஸ்தான் ஆட்சியில் உள்ள POK பகுதியிலுள்ளது), ஸ்ரீநகரிலுள்ள சங்கராச்சாரிய மலை (கோபாத்ரி மலை)யிலுள்ள ஜ்யேஷ்டேஸ்வரர் கோவில் முதலிய ஸ்தலங்களுக்கு சென்று உபாஸித்தார்.



சாரதா பீடம்



சங்கராச்சாரியார் குன்று, ஸ்ரீநகர்
ஜ்யேஷ்டேஸ்வரர் கோவில்

காஞ்சியின் 16வது சங்கராச்சாரியார் உஜ்வலசங்கரர் தன் இறுதி நாட்களில் காஷ்மீர் சென்று அங்கேயே ஸித்தியடைந்தார். 17வது ஆச்சாரியர் ஸதாஸ்வேந்த்ரர் காஷ்மீரைச் சேர்ந்த தேவமிஸ்ரா என்பவரின் புத்ரர். 20வது ஆச்சாரியர், மூகசங்கரர், மூகபஞ்சஸதியை ஆக்கியவர்; அவருக்கு, காஷ்மீர் ராஜாக்களான மாத்ருகுப்தா (உஜ்ஜயினியைச் சார்ந்தவர்), மற்றும் ப்ரவரஸேனர் ஆகியோர் நெருங்கிய சிஷ்யர்களாக இருந்தனர். 31வது ஆச்சாரியர் ப்ரம்மானந்தகநேந்த்ரருக்கு, மிக ப்ரஸித்திபெற்ற காஷ்மீர ராஜா லலிதாதித்யர் சிஷ்யர். 38வது ஆச்சாரியர் அபிநவசங்கரர் காஷ்மீரத்தில் ஸர்வக்ஞபீடம் ஏறி, அங்கேயே ஸித்தியடைந்தவர். 47வது ஆச்சாரியர் சந்திரசேகரருடைய சிஷ்யராக இருந்தவர் காஷ்மீர ராஜா ஜயஸிம்மர்.

காஷ்மீரில் பெரிய ஸர்வகலாசாலை பண்டைய நாட்களில் இருந்தது; காஞ்சியின் கடிகாஸ்தானத்தைப் போன்று. மம்மடர், அபிநவகுப்தர், கல்ஹணர் போன்ற பெரும் கவிஞர்கள் அங்கு சிறந்து விளங்கினர். ஸாரதாலிபி என்ற விசேஷ காஷ்மீர எழுத்து வடிவத்தில் பல இலக்கியங்கள் உருவாகின.

2010 முதல் நம் காஞ்சி மடத்தின் மூலம் விஸ்வஸாந்தி மஹாயக்ஞம், வேதபாராயணம், உபன்யாஸங்கள், பஜனைகள் முதலியன ஸ்ரீநகரில் ஆண்டுதோறும் சங்கரஜயந்தியை ஒட்டி விமரிசையாக நடத்தப்பட்டு வருகின்றன. லதாக் பகுதியில் ஸிந்து பூஜை என்பதும் ஆண்டிற்கொருமுறை நடந்துவருகிறது. காஷ்மீரில் புதிதாக சாரதாதேவியின் ஆலயமும் நிர்மாணிக்கப்பட்டு நன்றாக நடந்து வருகிறது. ஸ்ரீஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் விசேஷ முயற்சியுடனும் ஆசியுடனும் தொடங்கிய இந்நிகழ்வுகள் காஷ்மீருக்கும் நமக்கும் உள்ள தொடர்பை வலுவாக்குகின்றன என்பதில் ஐயமில்லை. நம் ஆச்சாரியர்கள் காஷ்மீர் பகுதிகளில் நேரில் சென்று தர்மத்தைப் பரப்புவதில் பெருமுயற்சி எடுத்து வருகின்றனர்.

காஷ்மீரில் பழக்கத்திலுள்ள வேதத்தின் கடஸாகை நம்முடைய க்ருஷ்ண யஜுர்வேதத்தைப் போலவே பல மந்த்ரங்களைக் கொண்டுள்ளது. அவர்களுடைய லௌகாக்ஷி க்ருஹ்யஸூத்ரமும் நம் ஆபஸ்தம்பஸூத்ரம் போலவே உள்ளதால், விவாகம், உபநயனம் போன்ற வைதீக சடங்குகளும் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருப்பதைப் பார்க்க முடிகிறது. ஸ்ரீகாஞ்சி மடத்தின் முயற்சியால் லௌகாக்ஷி க்ருஹ்யஸூத்ரம் 2012ம் ஆண்டு ப்ரசுகரிக்கப்பட்டது. வைதீகமந்த்ரகல்பலதா என்ற காஷ்மீர நூலும் பரிசீலிக்கப்பட்டு நம் ஸ்ரீமடத்தைச் சேர்ந்த வைதீகர்களால் ஓதப்பட்டு ஒலிப்பதிவு செய்து வெளியிடப்பட்டது.

2021 ஆகஸ்டு மாதத்திலிருந்து வாராவாரம் காஷ்மீர் ஸம்பந்தப்பட்ட பல விஷயங்களைப்பற்றி 'ஆன்லைன்' சொற்பொழிவுகள் நம் ஆசாரியாள் ஜகத்குரு ஸ்ரீசங்கரவிஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆக்ஞைப்படி நடந்து வருகின்றன. ஆரம்பத்தில் அமரநாத மாஹாத்ம்யம், ராஜதரங்கிணி, நீலமதபுராணம், ப்ருங்கீஸ ஸம்ஹிதை ஆகிய விஷயங்களைப்பற்றிய சொற்பொழிவுகள் அடியேனால் நிகழ்த்தப்பட்டன. காஷ்மீருடன் நம் ஸம்பந்தத்தை வலிவுபடுத்தும் விதமாக ஸ்ரீமடம் மேலும் பல முயற்சிகளைக் கைக்கொண்டு வருகிறது. ராஜதரங்கிணியில் உள்ள விஷயங்கள் பரவலாக எல்லோருக்கும் தெரியவேண்டும் என்று ஆச்சாரிய ஸ்வாமிகள் ஆக்ஞாபித்ததையொட்டி வெளியிடப்படும் இத்தொடர் மூலம் காஷ்மீருடன் நம் பரிசயமும், உறவும் வ்ருத்தியடைந்து காஷ்மீரில் சாந்தியும் ஸுபீக்ஷமும் நிலவ ஸ்ரீ சாரதாதேவியையும், காமாக்ஷிதேவியையும் ப்ரார்த்திப்போமாக.

(தொடரும்)

**வேண்டுதல் வேண்டாமை இலான அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல ।। 4 ।।**

*விருப்பு, வெறுப்பு இல்லாத (இறைவனுடைய திருவடிகளைச் சார்ந்திருப்பவர்களுக்கு ஒரு பொழுதும் துன்பமானது இல்லை.*

*நான் எல்லா உயிர்களிடத்திலும் சமமாக இருக்கிறேன். என் விருப்புக்கும், வெறுப்புக்கும் உரியவர் எவரும் இல்லை.*

***(ஸ்ரீமத் பகவத்கீதை 9-29)***

**இருள்வோர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு ।। 5 ।।**

*எல்லா இடத்திலும் நீக்கமற நிறைந்துள்ள கடவுளை, பொருள் நிறைந்த புகழ்மொழிகளால் வாயாரப் பாடுகின்றவர்களுக்கு, அறியாமையைச் சார்ந்துள்ள நல்வினைப் பயனாகிய இன்பமும், தீவினைப் பயனாகிய துன்பமும் உள்ளத்தின் சீரான அமைதியைக் குலைக்காது.*

*எவரிடமிருந்து உயிர்ளின் தோற்றமும், செயல்களும் தோன்றினவோ, எவரால் இவையனைத்தும் நிரப்பப்பட்டிருக்கின்றனோ, அவரை தனது செயல்களின் வாயிலாக வழிபட்டு மனிதன் பிறவிப் பயனைப் பெறுகிறான்.*

***(ஸ்ரீமத் பகவத்கீதை 18 - 46)***

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 3

நாராயணம் பத்மபுவம் என்று பகவான் நாராயணரைத் தொடர்ந்து அத்வைத ஆசார்ய பரம்பரையில் வருபவர் பிரம்மா. எல்லா புராணங்களும் சாஸ்திரங்களும் இவர் மூலமாகத் தான் வெளிவந்துள்ளன. பகவானிடமிருந்து வேதம் முதலான எல்லா சாஸ்திரங்களையும் முதலில் பெற்றவர் இவரே. பகவத் அனுக்ரஹத்தால் இவற்றின் ஸாரத்தைக் கிரஹிக்கும் ஆற்றலைப் பெற்றவர் இவர். சமஷ்டி புத்தி தத்துவத்திற்கு அபிமானி தேவதையாயிருப்பதால் இவர் மூலம் உலகில் வெளிப்பட்டது பொருத்தமே.

வாக்தேவியான ஸரஸ்வதிக்கு இவர் கணவராயிருப்பதாலும், வாக்தேவி என்றும் இவர் நாக்கில் உறைவதாலும் இவரே ஸநாதன பிரம்ம வித்யைக்குப் பிரசாரகராகிறார். பகவத் தத்துவத்தின் உந்திக் கமலத்திலிருந்து தோன்றினார் என்று இதிஹாஸமாகச் சொல்லப்பட்டாலும், இவர் ஸ்வயம்பூ (தான் தோன்றி) என அறியப்படுகிறார். பிரம்ம சைதன்யத்தின் சிருஷ்டி குறித்த பிரகிருதி ஸம்பந்தப்பட்ட மலர்ச்சியே பிரும்மா என்றும் ஹிரண்ய கர்ப்பர் என்று அறியப்படுகிறது.

வேதாந்த தத்துவப் பிரபோதர்களாக விளங்கிய ஸனகாதி முனிவர்களும், அத்ரி மஹரிஷியை முதலாகவும், நாரதரைக் கடைசியாகவும் கொண்ட பதினோரு பிரஜாதிபதிகளும், ஸப்தரிஷிகளும் இவரது மானஸ புத்ரர்களே. இந்திரன் முதலானவர்கள் கூட இவரிடமிருந்தே ப்ரும்ம வித்யையைப் பெற்றனர் என்று உபநிஷதம் கூறுகிறது.



பிரம்மா துவங்கி அவரது சிஷ்ய பரம்பரையில் வரும் பிரும்ம வித்யைக்கே ஆம்நாயம் என்று பெயர்.

**ஆம்நாய: ச்ருத்ய: ஸாக்ஷாத்**
**ப்ரஹ்ம வித்யேதி விச்ருத: ।**
**குரு பரம்பரா ப்ராப்த:**
**விச்வகர்த்து: ஹி ப்ரஹ்மண: ॥**

இக்கருத்தை அடியொற்றி உபநிஷத்தும் கூறுகிறது.

**ப்ரஹ்மா தேவானாம் ப்ரதம: ஸம்பபூவ**
**விச்வஸ்ய கர்த்தா புவனஸ்ய கோப்தா ।**
**ஸ ப்ரஹ்ம வித்யாம் ஸர்வவித்யா**
**ப்ரதிஷ்டா மதர்வாய ஜ்யேஷ்ட புத்ராய**
**ப்ராஹ ॥**

சிருஷ்டி கர்தாவும், பாலன கர்த்தாவுமான பிரும்ம தேவர் தன்னைத் தானே தோற்றுவித்துக் கொண்ட முதல்

தேவனாவார். இவர் தனது மூத்த குமாரனான **அதர்வா** வுக்கு எல்லா வித்யைகளுக்கும் மூல வித்யையாயிருக்கும் ப்ரஹ்ம வித்யையை உபதேசித்தார்.

முண்டகம் 1 - 1 - 1

இவ்வாக்கியத்திற்கு உரையெழுதும் போது ஸ்ரீ பாகவதர் **ப்ரஹ்மணாவா அக்ரஜேந உக்தேதி ப்ரஹ்ம வித்யா** ஆதி தேவனான ப்ரும்மாவால் உபதேசிக்கப்பட்டதால் இந்த அத்யாத்ம வித்யா ப்ரஹ்ம வித்யா எனப்பட்டது என்கிறார்.

மேற்கண்ட உபநிஷத் வாக்யமும், பகவத் பாதரின் விளக்கமும் பிரும்ம தேவரிடமிருந்து வேதாந்த வித்யை பிரகடனமாயிற்று என்பதை நிரூபிக்கிறது. ஸ்ரீமத் பாகவதமும் இதைத் தெளிவுபடுத்துகிறது. உத்தவ கீதையில் பகவான் கூறுகிறார்.


**காலேன நஷ்டப்ரளயே**
**வாணீயம் வேத ஸம்ஞுதா ।**
**மயாதெள ப்ரஹ்மணே ப்ரோக்தோ**
**தர்மோ யஸ்யாம் மதாத்மக: ।।**
**தேந ப்ரோக்தா ச புத்ராய**
**மநவே பூர்வஜாய ஸா ।**
**ததோ ப்ருக்வாதயோக்ருஹ்ணன்**
**ஸப்த ப்ரம்மரிஷயே: ।।**

ப்ரளய காலத்தில் மறைந்து போன என்னைப் பற்றிய வேத வித்யையை நான் முதலில் ப்ரும்மாவுக்குச் சொன்னேன். பிரும்மா தன் குமாரனான மனுவுக்குச் சொன்னார். மனுவிடமிருந்து ப்ருகு முதலான மகரிஷிகளும், பிரும்ம ரிஷிகள் ஏழு பேரும் கிரஹித்தனர்.

இப் பாகவத வாக்யமும் அத்வைத ஆசார்ய பரம்பரையில் பிரும்மா முதலில் வருகிறார் என்பதை நிரூபிக்கிறது. ஸம்ப்ரதாய பரம்பரையில் அல்லாமல் இஷ்டத்திற்கு வேதாந்த வித்யை கற்பவன் மூடன் போல் ஒதுக்கத் தக்கவன் என்பது பகவத்பாதரின் கருத்து. **அஸம்ப்ரதாயவித் மூர்க்கவத் உபேக்ஷணீய: ।।** எனவே ஸம்ப்ரதாய முறைப்படி கற்கப்படும் ப்ரஹ்ம வித்யையே பயன்தரும் என்பது புலனாகிறது. ப்ரஹ்மவித்யா ஸம்ப்ரதாயயே அத்வைத ஆசார்ய பரம்பரை. பிரம்ம தேவரே ஞான வடிவானவர். இவர் சமஷ்டி புத்தி தத்துவமாயிருப்பதால் இவரது நான்கு முகங்கள், நான்கு வேதங்களையும், நான்கு கரங்களும் மனம், புத்தி, சித்தங்கள் அஹங்காரம் என்ற நான்கு தத்துவங்களையும் குறிக்கின்றன. ஒரு கரத்தில் ஜப மாலை, ஒரு கரத்தில் வேதச் சுவடிகள், ஒரு கரத்தில் கமண்டலமும், ஒரு கரம் அபயஹஸ்தம். ஜபமாலை சாதனைகளையும், கால சுழற்சியும், வேதச் சுவடிகள், சாஸ்திர ஞானத்தையும் கமண்டலு ஆசார நெறிகளையும் சிருஷ்டி பீஜங்களையும் அபயஹஸ்தங்களையும், அனுக்ரஹத்தையும் சொல்லா நிற்கின்றன.

பிரும்மாவைத் தொடர்ந்து வசிஷ்டர் மூலம் ப்ரஹ்ம வித்யை பிரசாரமாயிற்று.

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 4



அத்வைத ஆசார்ய பரம்பரையில் ஈச்வரர், நாராயணர், பிரம்மா இவர்களைத் தொடர்ந்து வரிசையில் நான்காவது வருபவர் **வசிஷ்டர்.**

**வசிஷ்டோ வர:** என்ற சொற்றொடருக்கும் ஞானத்திற்கு அடிப்படையான சித்த சுத்தியை ஜபத்தால் ஜெயித்தவர். ஜபம் செய்யும் பிரும்ம அவர்களுக்குள்ளேயே மேன்மை பெற்றவர். வேதத்தைப் பெறுவதற்கும், உபதேசிப்பதற்கும் தகுதி பெற்ற வேதரிஷி. அத்ரி, ப்ருகு, வசிஷ்டர், கௌதமர், காச்யபர் வியாஸர் என்ற பிரகிருத கல்பத்தின் வேத ரிஷிகளின் வரிசையிலும் நான்காம் இடத்தை வகிப்பவர். நான்காவது புருஷார்த்தமான க்ஷேமத்தைத் தர வல்லவர் என்பதை வரிசை எண் காண்பிக்கிறது. காயத்ரீ காலத்தில் எல்லாராலும் அழைக்கப்படுபவர். ராஜ வம்சத்து புரோகிதராகப் பணிபுரிந்து அவருக்கும், நாட்டு மக்களுக்கும் வழிகாட்டும் விளக்காய்த் திகழ்ந்தவர்.

**வசிஷ்டோபி மஹாதேஜா:** பிரும்ம தேஜஸுடைய பிரும்ம ரிஷி விச்வாமித்ர மஹரிஷியாலேயே தனிப்பட்ட பெருமையுடையவர். பரமாத்மா சக்ரவர்த்தித் திருமகனாக அவதரித்திருக்கிறார் என்றுணர்ந்தவர். வேதத்தின் அவதார நோக்கம் நிறைவேற நேரிடையாகவும், மறைமுகமாகவும் பணிபுரிந்தவர். பரமனின் ஸாம்ராஜ்ய அபிஷேகத்தை நடத்திய எண்மரில் முதலிடம் பெற்று நடத்தி மகிழும் பேறு பெற்றவர்.

விச்வாமித்திரர் யாக ஸம்ரக்ஷணத்தின் பொருட்டு தசரத மன்னனின் மூத்த குமாரன் ராமனை யாசித்தார். மன்னன் மறுக்கவே சினங்கொண்டார். அப்போது வசிஷ்டர் மன்னனிடம் பக்குவமாக எடுத்துச் சொல்லி ராமனை அனுப்ப சம்மதிக்கச் செய்தார். ராமனும், லக்ஷ்மணனும் அழைத்து

வரப்பட்ட காலத்தில் ராமன் சோக பரவசனாக இருந்ததைக் கண்டு திடுக்கிட்ட வசிஷ்டர் சோகத்திற்குக் காரணத்தைக் கேட்டார். அப்போதுதான் தீர்த்த யாத்திரை முடித்து வந்திருந்தான் ராமன். தீர்த்த யாத்திரை காலத்தில் நாடு முழுவதும் சுற்றிப் பார்த்த போது மக்களில் பெரும்பாலோர் துக்கப்படுவதையும், நிஜமான சுகத்தைப் பெற வழியறியாமல் நிலையற்ற சுகத்தைத் தேடி ஓடி இறுதியில் துக்க ஸாகரத்தில் விழுந்து தத்தளிப்பதையும் கண்டார். இதற்குத் தீர்வே கிடையாதா என வருந்தி ஆலோசித்துக் கொண்டிருந்தார். இந்த சமயத்தில் தந்தையின் அழைப்பு வரவே சபைக்கு வந்தார். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதற்கு இணங்க நெஞ்சிலிருந்த சோகத்தை முகம் காட்டிக் கொடுத்து விட்டது. வசிஷ்டர் கேட்கவும் பொல பொலவென்று நெஞ்சிலிருந்த எல்லாவற்றையும் கொட்டி விட்டான் ராமன்.

அப்போது விச்வாமித்ரரின் தூண்டுதலின் பேரில் சோக மோஹங்களுக்கு ஒரே மருந்தாயும், அருமருந்தாயுமிருக்கும் ஞானத்தை உபதேசித்தார். 32000 சுலோகங்களில் அற்புத ஞானப் பிரதர்சனமாக வெளிவந்த இவ்வுபதேசம் ‘யோக வாசிஷ்ட ராமாயணம்’ என்ற பெயரில் பிரஸித்தமாக விளங்கி வருகிறது. வசிஷ்டரெனும் ஞானகிரியில் உற்பத்தியாகி ராமனெனும் கடலை அடைந்ததும், புவனத்தைப் பாவனமாக்கக் கூடியதுமான யோக வாசிஷ்ட ராமாயணமெனும் மஹாநதி அத்வைத சித்தாந்தத்தை யோகம், விசாரம் எனும் இரு கரைகளை உடையதாக வற்றாத ஜீவநதியாக அத்வைத ஞான பூமியில் ஓடிக் கொண்டிருக்கிறது.

**வசிஷ்டகிரி ஸம்பூதா ராமஸாகர காமினி।**
**புநாது புவனம் புண்யா ராமாயண மஹாநதீ ॥**

இருபெரும் பிரிவுகளைக் கொண்டது இந்நூல். வைராக்யம், முமுக்ஷுத்வம், உத்பத்தி, ஸ்திதி, உபசமம் என்ற ஐந்து விஷயங்களை விவரிப்பது முதற் பிரிவு. இரண்டாம் பிரிவு பூர்வார்த்தம், உத்தரார்த்தம் என்ற இரு பகுதிகளைக் கொண்டது. ஜீவ தத்துவத்தின் ஸர்வ வ்யாபகத்துவமும், இரண்டற்ற ஒன்றேயான தன்மையும் விரிவாகப் பேசப்படுகிறது. அத்விதீய அனுபவநிலை நிர்ணயிக்கப்படுகிறது. முயன்றால் எல்லோரும் இந்நிலையை அடைய முடியும் என்பதும் நிரூபிக்கப்படுகிறது.

**ஏவம் ஸர்வமிதம் விச்வம்**
**பரமாத்மைவ கேவலம் ।**
**ப்ரஹ்மைவ பராகாசம்**
**ஏஷதேவ: பரஸ்ம்ருத : ॥**

நாம ரூபங்களாக வியாபித்திருக்கும் சேதன, அசேதன விபாகமின்றி பிரபஞ்சமனைத்தும் கேவல பரமாத்ம தத்துவமே. இதுவே ப்ருமம். இதுவே ப்ரகாசம் எனப்படுகிறது.

**ததேதத் பூஜனம் ச்ரேய: தஸ்மாத் ஸர்வம் அவாப்யதே ॥**

இதுவே பூஜிக்கத் தகுந்த வஸ்து. இப்பூஜனத்தால் (ஸர்வாத்மபாவ தர்சனத்தால்) எல்லாவற்றையும் பெறலாம்.

**ஆசிநோதிஹி ச்ஸாத்ரார்த்தம்**
**ஆசாரே ஸ்தாபயத்யபி ।**
**ஸ்வயம் ஆசரதே யஸ்மாத்**
**தஸ்மாத் ஆசார்ய உச்யதே ॥**

“சாஸ்திரங்களின் உண்மை தத்துவத்தை தெளிவாகத் தெரிந்து கொள்ள உலகிலுள்ள அனைவரும் நற்கதி பெற அவர்களையும் அந்த சாஸ்த்ர நெறிகளில் ஈடுபடுத்தித் தானும் சாஸ்திரங்களின் நெறிப்படி நின்று அனுபவத்தில் ஞானம் பெற்று தன்னில் தானாகி எல்லாமாய் நிற்பவர் ஆசார்யர்.”

இம்மூன்றையும் செய்தவர் வசிஷ்டர். சாஸ்திர ஞானமும், அனுபவ ஞானமும், பிரச்சார ஞானமும் ஒரு சேர அவர் பெற்றவர். பிரம்மாவின் மானஸ புத்ரர். இவர் ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் பிரஜாபதியின் குமாரி அருந்ததியை பத்தினியாகக் கொண்டவர். பிறிதொரு பிரும்மதேவரின் யக்ஞ குண்டத்தில் அக்ஷமாலா என்பவளை மணந்து சக்கரவர்த்தியின் சாபத்தால் உயிரைத் துறந்தவர். மற்றொரு சமயத்தில் வருணர்களுக்கு ஊர்வசியிடம் அவருடைய ஸஹோதரராகப் பிறந்தவர். நாரதருக்கு ஸஹோதரியான அருந்ததியைப் பத்தினியாக அடைந்தவர்.

நவப்ரஜாபதிகளுள் ஒருவர் என கருதப்படும் வசிஷ்டர், ரிக்வேதத்தின் ஏழு மண்டல ப்ரதர்சகராக அறியப்படுபவர். கர்மகாண்டம், ஞான காண்டம் இரண்டிலும் பூரண ஞானம் பெற்றவர். அஷ்ட யோகத்திலும், பக்தியிலும் நிலைபெற்ற இவர் குமாரரே சக்தி.

(வளரும்)

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
**ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு,** etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**
**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**
We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.
Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.
Contact above address.

# சாணக்ய ஸுபாஷிதம்

### புல்லறிவு

**யஸ்ய நாஸ்தி ஸ்வயம் ப்ரக்யா சாஸ்த்ரம் தஸ்ய கரோதி கிம்**

**லோசனாப்யாம் விஹீனாப்யாம் தர்பண; கிம் கரிஷ்யதி ॥**

*தனக்கும் தெரியாது, பிறர் சொல்வதையும் கேட்காத மனிதன். இரு கண்களும் இல்லாதவனுக்கு கண்ணாடி என்ன செய்யும்?*

### வெவ்வேறு பார்வை

**ஏக ஏவ பதார்தஸ்து த்ரிதா பவதி வீக்ஷித:**

**குணபம் காமினீ மாம்ஸம் யோகிபி: காமிபி: ஸ்வபி ॥**

*வஸ்து ஒன்றுதான் பார்வைகள் வெவ்வேறு. ஒரு பெண் அவள் யோகிகளால் சவம் என்றும், காமுகர்களால் காமினீ என்றும் மாம்ஸம் என்று நாய்களாலும் பார்க்கப்படுகிறாள்.*

### குருடு

**ந ச பஸ்யதி ஜன்மாந்த: காமாந்தோ நைவ பஸ்யதி**

**மதோன்மத்தா ந பஸ்யந்தி தோஷமர்தீ ந பஸ்யதி ॥**

*பிறவிக்குருடன் பார்ப்பதில்லை, காமாந்தகன் அறிவதில்லை, குடியில் ஆழ்ந்தவன் பார்ப்பதில்லை, பணத்தாசை பிடித்தவன் தன் எல்லையை பார்ப்பதில்லை.*

### ஓடு

**உபஸர்கே அன்யசக்ரே ச துர்பிக்ஷே ச பயாவஹே**

**அசாதுஜன ஸம்ஸர்கே ய: பலாயதி ச ஜீவதி ॥**

*பேரிடர் போதும் பகைவர்கள் சூழும்போதும் பஞ்சத்தின்போதும் கீழோர் சேர்க்கையின் போதும் எவன் ஓடி விடுகிறானோ அவன் தான் வாழ்கிறான்.*

### வல்லான் வகுத்தது

**அயுக்தம் ஸ்வாமினே யுக்தம் யுக்தம் நீசஸ்ய தூஷனம்**

**அம்ருதம் ராஹுவே ம்ருத்யு: விஷம் சங்கர பூஷணம் ॥**

*அயுக்தமானதை வல்லான் செய்தால் சரி. யுக்தமானதை கீழோன் செய்தால் தவறு. அமிர்தமே ராஹுவிற்கு தலையை வாங்கியது, விஷம் சங்கரனாருக்கு பூஷணம் ஆயிற்று.*

**வீண்**

**ஹதம் ஞ்யானம் க்ரியாஹீனம் ஹதச்சாக்யனதோ நர;**

**ஹதம் நிர் நாயகம் ஸைன்யம் ஸ்த்ரியோ நஷ்டா அபர்த்ருகா: ॥**

*செய்முறை இல்லா அறிவு வீண், அறிவே இல்லா மனிதன் வீண், நாயகனில்லா ஸைன்யம் வீண், கணவனில்லா பெண் வீண்.*

**பேருருவம் தகுமா?**

**ஹஸ்தீ ஸ்தூலதனு: ஸ சாங்குஸவஸ: கிம் ஹஸ்திமாத்ரோ அங்குஸ:**

**தீப: ப்ரஜ்வலிதே ப்ரணஸ்யதி தம: கிம் தீபமாத்ரம் தம:**

**வஜ்ரேணாபி ஹதா: பதந்தி கிரய: கிம் வஜ்ரமாத்ரம் நகா:**

**த்ஜோ யஸ்ய விராஜதே ஸ பலவான் ஸ்தூலேஷு கிம் ப்ரத்யய: ॥**

*யானை பேருருவம் கொண்டதுதான். அம்குசத்தினால் வசமாகும். அங்குசம் பேருருவமா? தீபத்தின் முன் அந்தகாரம் அழியும். தீப அளவா அந்தகாரம்? வஜ்ர வீச்சால் சாயும் பெரும் மலைகள். வஜ்ரத்தின் அளவா மலைகள்/ அல்ல தேஜஸ் யாரிடமுள்ளதோ அவனே பெரியவன்.*

**அழகு**

**கோகிலானாம் ஸ்வரோ ரூபம் ஸ்த்ரீணாம் ரூபம் பதிவ்ரதம்**

**வித்யா ரூபம் குரூபாணாம் க்ஷமா ரூபம் தபஸ்வினாம் ॥**

*கிளிக்கு கானம் அழகு, பெண்களுக்கு கற்பு அழகு, குரூபியாயினும் வித்யை அழகு, தபஸ்விகளுக்கு பொறுமை அழகு.*

**சரியான அறிவு**

**உத்பன்ன பச்சாத் தாபஸ்ய புத்திர்பவதி யாத்ருசீ**

**தாத்ருசீ யதி பூர்வம் ஸ்யாத் கஸ்ய ஸ்யான் மஹோதய: ॥**

*கருமத்தில் துணிந்தபின் வரும் அறிவு கர்மத்தில் முன்னால் வருமெனின் யார்தான் அறிவாளியாக மாட்டான்!* *(தொடரும்)*

ப்ரதீபப் பேழை

# ஸ்ரீ பாலபோத ஸங்க்ரஹம்

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யார் இயற்றியது

ஸ்ரீமத் அனந்தானந்த ஸ்வாமிகள் தமிழில் எழுதியது

**சிஷ்யன் :** ஸ்வாமி, தங்கள் அநுக்கிரகத்தால் நான் இந்த ஸ்தூல சரீரம் அல்ல என்பதை அறிந்து கொண்டேன். இது சத்தியம். தங்கள் அநுக்கிரத்தாலேயே இந்த ஸ்தூல சரீரத்தை ஒட்டி ஏற்படுகிற வர்ணாச்ரமங்கள், ஸ்திரீ, புருஷன், கறுப்பு, வெளுப்பு என்ற பேதம், நாமம், ரூபம் முதலியவையும் எனக்கு இல்லை என்பதையும் அறிந்து கொண்டேன். ஆனால் இவைகளைக் காட்டிலும் வேறாக இருக்கும் இந்திரியங்களாக நான் இருக்கிறேன் (என்று தோன்றுகிறது). இந்திரியங்களின் வியாபரங்களினாலேயே பார்க்கிறேன், கேட்கிறேன், தொடுகிறேன் முதலிய அநுபவங்கள் ஏற்படுவதால் அந்த இந்திரியங்கள் தாம் நான்.

**குரு :** குழந்தாய், இந்திரியங்களும் ஜடங்கள். நீ ஜடமான இந்திரியங்கள் அல்ல. அவை பஞ்சபூதங்களின் காரியங்கள்.

**சிஷ்யன் :** இந்திரியங்கள் எப்படி ஜடமாகும்? அவைகளை எப்படிப் பூதங்களின் சேர்க்கையினால் உண்டானவை எனலாம்?

**குரு :** குழந்தாய், இந்திரியங்களுக்கு ஆத்மாவை அறியும் சக்தி இல்லை. அவை ஆத்மாவை அறியா. வேறு ஒன்றையும் அறியும் சக்தியுமில்லை; விளக்குப் போல். 'காதே, இப்போது நீ எங்கே இருக்கிறாய்?' என்று கேட்டால், நான் இங்கு இருக்கிறேன் ஸ்வாமி என்று சொல்லும் சக்தி அதற்குக் கிடையாது. இப்படியேதான் எல்லா இந்திரியங்களுக்கும். ஆகையினால்தான் அவை ஜடங்கள் என்று சொல்லப்படுகின்றன. அவை எப்படி பஞ்சபூதங்களின் காரியங்கள் என்பதை சொல்லுகிறேன். கேள். ச்ரோத்ரேந்திரியம் பஞ்சபூதங்களில் ஒன்றான ஆகாசத்தின் காரியம். ஆகாசத்தின் ஆத்யாத்ம குணமான சப்தத்தை அறிவதற்கு அது சாதனமாகிறது. அப்படியே த்வகிந்திரியம் வாயு என்னும் பூதத்தின் காரியமாய் வாயுவின் ஆத்யாத்ம குணமாக இருக்கும் ஸ்பர்சத்தைக் கிரகிக்கச் சாதனமாகிறது. சக்ஷுரிந்திரியம் தேஜஸ் என்னும் பூதத்தின் காரியமாகி அதன் ஆத்யாத்ம குணமான ரஸனேந்திரியம் அப் என்னும் பூதத்தின் காரியமாகி அதன் ஆத்யாத்ம குணமான ரசத்தை அறியச் சாதனமாகிறது. ஞானேந்திரியம் பிருத்வி

என்னும் பூதத்தின் காரியமாய் அதன் ஆத்யாத்ம குணமாகிய கந்தந்தை அறியச் சாதனமாகிறது. இப்போது சொன்ன இவ்வைந்து (ச்ரோத்ர, த்வக், சக்ஷுஸ், ரஸன, க்ராணம் என்னும்) இந்திரியங்களும், ஞானேந்திரியங்கள் எனப்படும். இவை பஞ்சபூதங்களின் ஸத்துவாம்சத்திலிருந்து உண்டானவை. இனி, கர்மேந்திரியங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். கேட்பாயாக. வாக் என்னும் இந்திரியம், ஆகாசம் என்னும் பூதத்தின் காரியமாகி ஆகாயத்தின் ஆத்யாத்ம குணமான சப்தத்தை உண்டாக்குகிறது (உச்சரிக்கிறது). பாணி என்னும் இந்திரியம், வாயு என்னும் பூதத்தின் காரியமாய் அந்த வாயு பூதத்தின் ஆத்யாத்ம குணமான ஸ்பர்சத்தைக் கிரகிக்கிறது. கொடுக்கவும் கொடுக்கிறது. பாதம் என்னும் இந்திரியம், தேஜஸ் என்னும் பூதத்தின் காரியமாய், அந்தப் பூதத்தின் ஆத்யாத்ம குணமான போதல் (நடத்தல்) முதலியவைகளைச் செய்கிறது. குஹ்யேந்திரியம் அப் என்னும் பூதத்தின் காரியமாகி அந்தப் பூதத்தின் ஆத்யாத்ம குணமான மூத்திரம், ரேதஸ் முதலியவற்றை வெளியிடுகிறது. குதம் என்னும் இந்திரியம், பிருத்வி என்னும் பூதத்தின் காரியமாகி, அந்தப் பூதத்தின் ஆத்யாத்ம குணமான மலம் முதலியவற்றை வெளியாக்குகிறது. இம்மாதிரி மேலே சொன்ன (வாக், பாணி, பாதம், குஹ்யம், குதம் என்னும்) ஐந்து இந்திரியங்களும் (ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரியத்தைச் செய்வதனால்) கர்மேந்திரியங்கள் என்று சொல்லப்படுகின்றன. இவை பஞ்சபூதங்களின் ரஜோகுண அம்சத்திலிருந்து உண்டானவை. பஞ்ச பூதங்களின் தமோ குணங்களிலிருந்து உண்டானவை. சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்த, வசனம் (பேசுதல்). ஆதானம் (கொடுத்தல், எடுத்தல்). கமனம் (போதல்), விஸர்க்கம் (விடுதல்), ஆனந்தம் இவை. இந்த எல்லா இந்திரியங்களும் ஜடங்களாக இருந்து கொண்டு அதன் அதன் தேவதையின் அநுக்கிரகத்தினால் அதன் அதன் விஷயங்களில் பிரவர்த்திக்கின்றன.

**சிஷ்யன் :** எந்த இந்திரியத்துக்கு எது தெய்வம்?

**குரு** : ச்ரோத்ரேந்திரியத்துக்கு, திக்குகள் அதிதேவதை. த்வகிந்திரியத்துக்கு வாயு அதிதேவதை. சக்ஷுரிந்திரியத்துக்குச் சூரியன் தேவதை. ரஸனேந்திரியத்துக்கு வருணன் அதிதேவதை. ஞானேந்திரியத்துக்கு அச்வினி தேவதைகள், அதிதேவதைகள். வாகிந்திரியத்துக்கு அக்கினி அதிதேவதை. ஞானேந்திரியத்துக்கு அச்வினி தேவதைகள், அதி தேவதைகள். வவாகிந்திரியத்துக்கு அக்கினி அதிதேவதை.

பாணீந்திரியத்துக்கு இந்திரன் அதிதேவதை. பாதேந்திரியத்துக்கு விஷ்ணு அதிதேவதை. பாயுரிந்திரியத்துக்கு ம்ருத்யு அதிதேவதை. குஹ்யேந்திரியத்துக்கு ப்ரஜாபதி அதிதேவதை. இப்படியே ச்ரோத்ரேந்திரியத்துக்குக் கேட்பது என்பது அதிபூதம் (அதிபூதகாரியம்). நேத்ரேந்திரியத்துக்குப் பார்ப்பது என்பது அதி பூதம். த்வகிந்திரியத்துக்கு ஸ்பர்சம் அதிபூதம். ரஸனேந்திரியத்துக்கு ருசியை அறிதல் அதிபூதம். க்ராணேந்திரியத்துக்கு, கந்தம் (வாசனை) அதிபூதம். வாகிந்திரியத்துக்குப் பேசுதல் அதிபூதம். பாணீந்திரியத்துக்குக் கொடுத்தல் அதிபூதம். பாதேந்திரியத்துக்கு அதிபூதம் (நடத்தல்) போவது, வருவது. பாயுரிந்தியத்துக்கு அதிபூதம் விஸர்க்கம் (விடுதல்). உபஸ்தேந்திரியத்துக்கு அதிபூதம் சுகம். எல்லா இந்திரியமும் அதன் அதன் அதிதேவதையின் அநுக்கிரகத்தால் அதன் அதன் விஷயத்தை அறிகிறது (காரியத்தைச் செய்கிறது). ஆகையினால் இந்த இந்திரியங்கள் ஜடங்களே. நீ அந்த இந்திரியங்களல்ல.

**சிஷ்யன் :** ஸ்வாமி, இந்திரியங்கள் உண்மையில் ஜடங்களே என்னும் ஞானம் எனக்கு ஏற்பட்டு விட்டது. இதர இந்திரியங்களைக் காட்டிலும் வேறாக மனம் ஒன்று இருக்கிறதே. அதுதான் நான். மனம் சரியான ஸ்திதியில் இருப்பதால்தான் பார்க்கிறேன், கேட்கிறேன், மனம் சரியான ஸ்திதியில் இல்லாவிட்டால் பார்ப்துமில்லை. கேட்பதுமில்லை. ஆகையினால்தான் நான் அந்த மனந்தான் என்று நினைக்கிறேன்.

**குரு :** குழந்தாய், நீ எப்படி மனம் ஆவாய்? என் மனம் இப்போது சரியான நிலையில் இருக்கிறது என்று நினைக்கிறாய் (சொல்லுகிறாய்). அந்த மனத்தைக் காட்டிலும் அதை அறிகிற நீ வேறானவன் இல்லையா? மனம் உன்னால் அறியப்படுகிறது. மனத்தை அறிகிறவன் நீ. மனம் உன்னுடைய வசத்தில் இருக்கிறது. ஆகையால் நீ அந்த மனமாகமாட்டாய்.

**சிஷ்யன் :** ஸ்வாமி, நிஜமாக நான் மனமாக இல்லை. புத்தியினால் நிச்சயிக்கப்பட்ட விஷயத்தில்தான் மனம் பிரவர்த்திக்கிறது. ஆகையினால் நான் புத்தியாக இருக்கிறேன்.

**குரு :** புத்தியும் அந்தக்கரணத்தின் விருத்திதான். ஆகையினால் நீ புத்தியுமல்ல.

**சிஷ்யன் :** ஸ்வாமி, இவையெல்லாம் நான் அல்ல; அவை என்னால்

பார்க்கப்படுபவையாக இருப்பதால். ஆனால் நான் பிராணன் என்று நினைக்கிறேன். பிராணன் இருப்பதால்தான் பார்க்கிறேன், கேட்கிறேன், பிராணன் இல்லாவிடில் பார்ப்பதுமில்லை, கேட்பதுமில்லை. ஆகையினால் நான் பிரணனாக்தான் இருக்கிறேன்.

**குரு** : குழந்தாய், பிராணனும் நீ அல்ல; அதுவும் ஜடமாக இருப்பதால்.

**சிஷ்யன் :** பிராணன் எப்படி ஜடமாகும்?

**குரு** : சொல்கிறேன். இரவில் தூங்கும் புருஷனுடைய வஸ்துக்களைத் திருடன் அபகரித்துக் கொண்டு போய் விடுகிறான். தூங்கும் சமயத்திலும் பிராணன் இருக்கத்தான் இருக்கிறது. ஆனால் திருடிக் கொண்டு போனது ஏன் தெரியவில்லை? பிராணன் ஜடமாக இருப்பதனால்தான். ஆகையால்தான் ஜடமாக இருக்கிறது என்றேன்.

**சிஷ்யன் :** ஸ்வாமி, பிராணன் ஜடமென்றால் ஜடமான சரீரம் எப்படிச் சேஷ்டிப்பிக்கிறது? ஜடத்துக்குச் சேதனத்வம் இல்லையே?

**குரு** : சொல்லுகிறேன் கேள். ஜடமாக இருப்பதற்கும், அசையும் தன்மை உலகத்தில் காணப்படுகிறது. எப்படி என்றால், சண்டமாதம் அடிக்கும் போது அது வீட்டின் மேலுள்ள திருணங்கள் முதலியவற்றை ஆகாயத்தில் சுற்றச் செய்து வேறு இடத்தில் அவற்றைக் கொண்டு போய் போட்டுவிடுகிறது. இம்மாதிரியே பிராணனுக்கும் தேகத்தைச் சேஷ்டிக்கும் தன்மை உண்டு. ஆகையினால்தான் நீ பிராணன் அல்ல என்று சொல்லுகிறேன்.

**சிஷ்யன் :** தங்கள் ஆக்ஞையால் (அநுக்கிரகத்தால்) இவை எல்லாம் நான் அல்ல என்று தெரிந்து கொண்டவன். இப்படி அறிந்து கொண்டதனால் எனக்கு என்ன பயன் ஏற்படுகிறது?

(தொடரும்)

# அத்வைத சாஸ்திரமே பிரும்மவாதமெனும் சுத்தமார்க்கம்

ஸ்ரீ. நா. கிருஷ்ண சாஸ்திரிகள், தேவகோட்டை

**திருவிளையாடற் புராணத்தில்,**

***மறைவழி மதங்கட் கெல்லாம் மறைபிரமாணம் பின்சென்***
***றறைதரு மிருதி யெல்லா மவைக்கன குணமா மின்ன***
***முறையினன் ஸ்மார்த்த மென்று மொழிவதம் மார்க்கஞ் சேர்ந்த***
***துறைகள் வைதிகமா மேலாச் சொல்வதிச் சுத்த மார்க்கம்***

**திருவிளையாடற் புராணத்தில்,**

***அருமறை நால்வேறா கையால் வருணமாச் சிரமங்களு நான்காந்***
***தருமம் யாகாதி கருமமு முறையின் றகைமையிற் றோன்றின மறையுங்***
***கருமதூன் ஞானநூலென விரண்டாங் கருமநீலிவ னருச்சனைக்கு***
***வரும்வினை யுணர்ந்து ஞானநூ லிவன்றன் வடிவிலா வடிவினை யுணர்த்தும்***

*என்று கூறப்படுகிறது*

*மாயாவதி யாவர் யாவர் ?*

*மாயை ஒன்றினையே உலகுக்கு உபாதானகாரணம் என்றும், மாயை முக்காலத்தும் அழியாதது என்றும் கூறுவாரோ நியாயப்படி மாயவாதிகள்.*

*உதாரணமாக, பரமாணுவை உலகத்திற்கு முதற் காரணமாகக் கூறும் தார்க்கிகர் பரமாணுவாதிகள்; வையாகரணர் சப்தப்பிரும்மவாதிகள்; யோகாசாரர்கள் க்ஷணிகவிஜ்ஞான வாதிகள்; மாத்யமிகர்கள், சூன்யவாதிகள் இவ்வாறே மாயாவாதிகள் என்ற பதம் ஸாங்கியர்களைக் குறிக்கிறது. அத்வைதிகள் பிரும்மவாதிகளா யிருக்கிறார்கள்.*

*அத்வைத சாஸ்திரமே பிரும்மவாதமெனும் சுத்தமார்க்கம்*

*வேதாந்தம் சுத்தம் (திருமந்திரம், சுத்தம் சைவம் 4 என்ற திருமூலர் கருத்துப்படி பார்த்தால், சுத்த சைவந் தான் வேதாந்தமென்று கூறப்படுகிறது; மாயா வாதம் என்ற பெயராலன்று என்பது தெரிகிறது.*

வைஷ்ணவத்வைதிகள் பிரக்ருதியை (விஷ்ணுமாயையை) உலகத்திற்கு உபாதானகாரணம் என்கின்றனர். சைவத்துவதிகளும் மாயையையே உலகுக்கு உபாதானம் என்கின்றனர். இவ்விருவரும், மாயையை त्रिकालाबाध्या முக்காலத்திலும் அழியாதது என்றும் கூறுகின்றனர். ஆதலால் முற்கூறிய முறையில் கவனித்துப் பார்க்கும் போது, இருவருடைய கொள்கையும் 'மாயாவாதம்' என்பது பொருத்தமாகிறது. விசிஷ்டாத்வைதிகளும் அபிந்நநிமித்தோபாதானத்தை ஒப்புக் கொள்வதாகக் கூறிய போதிலும் 'பகவத் ஸ்வரூபம் நிமித்தகாரணம்; பகவத் சரீர ரூபமான பிரக்ருதியே ஜகத்துக்கு உபாதான காரணம்' என்று ஆழ்ந்து ஆராயும் போது தெரிவிக்கிறார்கள். ஆதலால், அவர்களுடைய மதத்திலும், 'வேதத்தில் மாயை என்று கூறப்பட்ட பிரகிருதியே ஜகத்குரு உபாதான காரணம்' என்ற முடிவு ஏற்படுகிறது. அவர்கள் மதத்தில், மாயை ஞானத்தால் அழியக்கூடியதில்லையாதலால், மாயை முக்காலத்தும் அழியாததாகிறது. ஆகையாலும், மாயை ஜகத்துக்கு உபாதானகாரணம் என்பதும், மாயை நித்யம் என்பதும் ஏற்பட்டிருக்கின்றன.

எனவே, விசிஷ்டாவாதிகளை மாயாவாதிகள் என்று கூறுவதும் நன்கு பொருந்தியிருக்கிறது.

அத்வைத சாஸ்திரத்தில் அப்படியில்லை. அத்வைத மதத்தில், 'மாயையுடன் கூடிய பிரும்மந்தான் விவர்த்தஉபாதான காரணம்' என்று கூறப்படுகிறது. தனித்த மாயை மாறுபடுந் தன்மையுள்ள பரிணாமி உபாதான காரணம் மட்டுமே என்று சொல்லப்படுகிறது. எனவே, அத்வைத மதத்தில் தனிப்பட்ட மாயைதான் ஜகத்துக்குப் பரிணாமி உபாதான காரணம்.

ஞானம் பிறந்தவுடன் அம்மாயை அழிந்து விடுமாதலால், அத்வைத மதத்தில், மாயை முக்காலத்திலும் அழியாத நித்தியமான வஸ்துவன்று தனிப்பட்ட மாயை ஜகத்துக்கு உபாதான காரணம் என்று ஒப்புக் கொள்ளப்படாமையாலும், அத்வைத மதம் மாயையை யழிப்பதற்காகவே விளங்குகிறதாதலாலும், அத்வைத சாஸ்திரம் மாயாவாதமன்று. ஆனால் இவ்வத்வைத சாஸ்திரம் பிரும்மவாத சாஸ்திரமே. 'அத்வைதப் பிரும்ம வாதம்' என்ற சொல் பலவிடங்களில் வழங்கப்படுகின்றது. வேதத்தில் 'பிரும்ம வித்து', 'பிரும்மவாதி' என்ற சொற்கள் காணப்படுகின்றன. மீமாம்ஸகர் முதலிய வைதிகர்களும், பௌத்தர் முதலிய அவைதிகர்களும், தங்கள் தங்கள் சாஸ்திர நூல்களில் அத்வைத சாஸ்திரத்தையே பிரும்மவித்துக்களின் மதம் என்று குறிப்பிடுகின்றனர்.

'மாயாவாதிகள்' என்பது ஸாங்க்யர்களைக் கூறும் என்பதற்கு ஆதாரம்.

**சைவத் திருமுறைகளுள் ஒன்றான திருமந்திரத்தில்**

**ஆகின்ற தொண்ணூறோ டாறும் பொதுவென்பர்**
**ஆகின்ற வாறா றருஞ்சைவர் தத்துவம்,**
**ஆகின்ற நாலேழ் வேதாந்தி, வயிணவர்க்கு**
**ஆகின்ற நாலாறு, ஐயைந்து மாயாவாதிக்கே**

என்று கூறப்பட்டிருக்கிறது.

இந்தப் பாட்டில் 'மாயாவாதி' என்ற சொல்லும் 'வேதாந்தி' என்ற சொல்லும் தனித்தனியே காணப்படுகின்றன. இங்கு, இருபத்தைந்து தத்துவங்களோடு கூடியவனென்று கூறப்படுகிற ஸாங்கியனைக் காட்டிலும் வேறாகவும், முப்பத்தாறு தத்துவங்களையுடைய சைவனைக் காட்டிலும் வேறாகவும் ஒருவன் 'வேதாந்தி' என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறான். அவனே வேதாந்தி, அத்வைதப்பிரும்மவாதி, 'ஆகமங்களா லளந்தறியப்பட்ட தத்வம் முப்பத்தாறு உடையவனையும் வேதசம்மதமான தத்வங்களை யுடையவனையும் காட்டிலும் வேறுபட்ட ஒருவனே மாயாவாதி' அவனே ஸாங்க்யன் என்பது தெளிவு.

சைவசமயாசாரியர் யாவரும் அத்வைததத்வத்தை நிரூபிக்க, அச்சைவத் திருமுறைகளும், அத்வைத பரமாயிருக்க, அச்சைவத் திருமுறைகளுள், 'திருமந்திரம்' மாயாவதி என்பது இருபத்தைந்து தத்துவமுள்ள ஸாங்கியனையே குறிக்குமென்றும், வேதாந்தி, சாங்க்ய - சைவ - வைஷ்ணவ - பின்னன் என்றும் விளக்க, பின்வந்த சைவநூல்கள் அத்வைதிகளை மாயாவாதிகள் என்று கூறுவது அவர்களுடைய பிரமாண நூல்களுக்கும் உண்மைக்கும் அநுகுணமன்று.

இதே திருமந்திரத்தில் வேறோரிடத்தில், நற்சீடனுடைய லக்ஷணம் கூறுமிடத்து வேதாந்தியிடம் செலுத்த வேண்டிய மனப்பான்மையை விளக்குகிறார்.

**வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால்**
**வாழ்க்கைப் புனல்வழி மாற்றிச் சித்தாந்தத்து**
**வேட்கை விடுமிக்க வேதாந்தி பாதமே**
**தாழ்க்குந் தலையினோன் சற்சீட னாமே**

வேதாந்திகள் வேதமார்க்கத்திற் சொல்லுகின்றவன், அவனுடைய மதமே வைதிக மதமாகும். அதுவே சுத்த மார்க்கம் என்று கூறப்படும்.

**திருவிளையாடற் புராணத்தில்**

**மறைவழி மதங்கட் கெல்லாம் மறைபிரமாணம் பின்சென்**
**றறைதரு மிருதி யெல்லா மவைக்கனு குணமா மின்ன**
**முறையினன் ஸ்மார்த்த மென்று மொழிவதம் மார்க்கஞ் சேர்ந்த**
**துறைகள் வைதிகமா மேலாச் சொல்வதிச் சுத்த மார்க்கம்**

என்று கூறப்பட்டிருக்கிறது.

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார் ।। 6 ।।**

*ஐந்து பொறிகளின் (இந்த்ரியங்களின்) வாயில்களின் வழியாகச் செல்லும் ஆசைகள் அற்ற இறைவனுடைய பொய்மையற்ற (மெய்யான மறைநூல்கள் கூறும் ஒழுக்க நெறியில் (ஆசாரப்படி) வழுவாமல் நிலைத்திருப்பவர்கள், எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்.*

*ஆற்றலுடையாய் ! யாருடைய பொறிகள் புலன்களில் இருந்து பிரிக்கப்பட்டிருக்கின்றனவோ, அவனது அறிவு நிலைபெற்றுள்ளது.*

**(ஸ்ரீமத் பகவத்கீதை 2-68)**

**தனக்குஉவமை இல்லாதான்தாள் சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது ।। 7 ।।**

*தனக்கு ஒப்பும், உயர்வும் அற்ற (இறைவனுடைய) திருவடிகளைச் சார்ந்திருப்பவர்களைத் தவிர (மற்றவர்களுக்கு) மனதில் தோன்றி வருத்தும் துன்ப எண்ணங்களை மாற்றுவது (நீக்கி இன்பமடைவது) மிகக் கடினமானது. (இயலாது).*

*மூவுலகிலும் ஒப்புயர்வற்ற பெருமையுடையவரே ! உமக்கு ஒப்பாரும் மிக்காரும் இவர்.*

**( அர்ஜுனன் சொல்வது:**
**ஸ்ரீமத் பகவத்கீதை 11 - 43)**

# முகாம் நிகழ்ச்சிகள்

தொடர்ச்சி



15.1.23 அன்று விசாகப்பட்டினம் முகாமில் மகர சங்கராந்தி விழா கொண்டாட்டங்கள் துவங்கப் பெற்றன. இதற்கு முந்தைய நாளில் பாரம்பரிய முறையில் போகிப் பண்டிகை கொண்டாடப்பட்டது. முகாம் பகுதிகள் பண்டிகை பெரு விழாவினை முன்னிட்டு அலங்காரத் தோரணங்களாலும், பாரம்பரிய முறையில் கோலங்கள் இட்டு, பசுஞ்சாணத்தில் மலர்கள் வைத்து அலங்கரிக்கப்பட்டிருந்தன. இதனைச் சுற்றி பகவன் நாம சங்கீர்த்தனத்துடன் கோலாட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பக்தர்கள் அனைவரும் இந்நிகழ்ச்சிகளுடன் ஸ்ரீஸ்ரீ பெரியவர்களின் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜையிலும் கலந்து வணங்கினார்கள். நித்ய பூஜையுடன் ஸ்ரீ சூர்யநாராயண சுவாமி பூஜை, சூர்ய நமஸ்காரம் ஆகியவை நடைபெற்றன.

ஸ்ரீஸ்ரீ பெரியவா ஸ்ரீ சூர்யநாராயண சுவாமி பூஜை ஹாரத்தி முடிந்தவுடன் நவக்ரஹ பரக்ஷிணம் செய்து பூஜையில் கலந்து கொண்ட பக்தர்களை ஸ்ரீ சூர்ய நாராயண சுவாமி நவக்ரஹ ஸ்லோகங்களை பாராயணம் செய்யும்படியும் அனுக்ரஹித்தார்கள்.

முகாமில் தொடர்ந்து நித்ய பூஜைகள் நடைபெற்று வருகின்றன. தொடர்ச்சியாக 28.1.23 ரத சப்தமி தினமானதால் பூஜ்ய ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் விசாகப்பட்டினம் கடற்கரையில் பர்வகால மங்கள ஸ்நானம் செய்தார்கள். அவ்வமயம் சூர்ய, சௌர நமஸ்காரங்கள் நடைபெற்றன. மேலும் ஸ்ரீ ராஜு கணபதி காரு இதன் ஸ்லோகங்களை ஜபிக்க, மஹா மஹோபத்யாய ஸ்ரீ விஸ்வநாத கோபாலகிருஷ்ண சாஸ்திரிகள் இதற்கான விளக்கங்கள் அளித்தார்கள்.

# திருமுறைத் தேன் துளிகள்

முனைவர் கலை ராம வெங்கடேசன்

முதல்வர் ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏனாத்தூர்

*சிறு வயது முதல் ஆன்மீக பால் முழுக்கவனம் இருந்ததால் திருமுறைகளை ஓதக் கற்றுக் கொண்டவர். திருமுறைப் பாடல்களை இளைய சமுதாயத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்னும் ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஆணைப்படி அவர் மனம் கவர்ந்த காவிரி 63 வடகரைத் தலங்களில் பதிகங்களில் ஒரு பாட்டு வீதம் தேர்ந்தெடுத்து பொருள் விவரங்களை எழுதியுள்ளார். வாசகர்கள் படித்து இன்புறுக.*

*(ஆசிரியர்)*

**செல்வ நெடுமாடம் சென்று சேண் ஓங்கிச்**
**செல்வ மதிதோயச் செல்வம் உய்ர்கின்ற**
**செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய**
**செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே.**

திரு ஞான சமப்ந்தர்

பொருள் செல்வ செழுமையுடன் உயர்ந்து நிற்கும் மாட மாளிகைகள் விளங்கவும் ஞானமாகிய உயர்ந்த செல்வம் ஒளி வீசும் வண்ணம் அச்செல்வத்தில் உயர்ந்து விளங்கும் மறை ஓதும் ஞானச் செல்வங்கள் வாழும் தில்லையில் சிற்றம்பல நாதனாகிய செல்வனின் கழலை போற்றி வாழ்தலே சிறந்த செல்வமாகும்.

தலம் : சிதம்பரம், இறைவன் : நடராஜர், இறைவி : சிவகாம சுந்தரி, அமைவிடம் : ப்ரசித்தி பெற்ற தலம்.

**தலப்பெருமை :** கோயில் என்றாலே சைவத்தில் சிதம்பரத்தைக் குறிக்கும். அடர்ந்த காடுகள் இருந்ததனால் தில்லை வனம் என்று குறிப்பிடப்படும். தில்லை வாழ் அந்தணர்கள் இருந்து இறைவனை பூஜித்து வரும் தலம். அர்த ஜாம வழிபாடு முடிந்தபின் எல்லா கோயில்களிலும் உள்ள சிவ கலைகள் இங்கு மூல நாதர் லிங்கத்தில் ஒடுங்கும். எனவே அர்த்த ஜாம பூஜை இங்கு விசேஷம். நடராஜ பெருமானுக்கு அருகில் சிதம்பர ரகசியம் உள்ளது. இறைவன் உருவமாக நடராஜ மூர்த்தியாகவும், உருவ அருவமாக ஸ்படிக வடிவிலும் (ஆதி சங்கரர் ப்ரதிஷ்டை செய்தது) அருபமாக சிதம்பர ரகசியமாகவும் இருக்கிறார்.

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

**ஓம் இந்த்ரியாகோசராய வேதாந்தபாஸ்கராய மன : ।**

**ரூபசப்தாதிஹீனத்வாத் இதி வேதாந்த பாஸ்கர : ॥**

***பிரம்மத்திற்கு உருவம், ஒலி முதலானவை இல்லாததால் பரப்பிரம்மத்தைக் கண்ணினால் பார்க்க முடியாது, வாக்கினால் வர்ணிக்க முடியாது. மனதினாலும் அறிய முடியாது.***

## 2. இந்திரியங்களுக்கு வேலை இல்லை !

**ந தத்ர சக்ஷுர்கச்சதி ந வாக்கச்சதி நோ மன : ।**

**கேனோபநிஷத் 1 - 3**

***ஆத்மனைக் கண்ணினால் பார்க்க முடியாது. வாக்கினாலும் வர்ணிக்க முடியாது, மனதினாலும் சிந்திக்க முடியாது.***

'கண்ணால் காண்பது மெய், காதால் கேட்பது பொய்' என்னும் பழமொழி உலகத்திலிருக்கக் கூடிய எல்லா பொருட்களுக்கும் பொருந்தும். ஸ்தூலமாகிய கண்களால் பார்க்க முடியாததை நுண்கருவியினால் பார்க்க முடியும். மிகத் தொலைவில் இருக்கக் கூடிய நக்ஷத்திரங்களுக்குக் கண்கள் மட்டுமே பிரமாணம்.

ஆத்மாவை எந்த இந்தரியங்களாலும் தெரிந்து கொள்ள முடியாது. ஏனென்றால் ஆத்மாவுக்கு உருவம் இல்லை. உருவத்தை மட்டும் தான் கண்களால் தெரிந்து கொள்ள முடியும். ஒலி, தொடு உணர்ச்சி, சுவை, மணம் முதலானவற்றைக் கண்களால் தெரிந்து கொள்ள முடியாது. அதனதன் விஷயங்களை மட்டுமே அந்தந்த இந்திரியங்களால் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் ஆத்மாவுக்கு, ஒலி முதலிய எந்த குணங்களும் இல்லாததால், இந்திரியங்களால் ஆத்மாவை அறிய முடியாது. அனுபவத்தினால் மட்டும் தான் ஆத்மாவைத் தெரிந்து கொள்ள முடியும்.

।। ஓம் ஸத்தானரஹஸ்யவிதே வேதாந்த பாஸ்கராய நம : ।

**குதானாத் குத்ஸிதாம் கேஹீ கதிம் ப்ராப்னோதி து:க்கதாம் ।**

**தஸ்மாத் ஸுதானம் கர்தவ்யம் இதி வேதாந்த பாஸ்கர : ।।**

***கிரஹஸ்தனானவன் கெட்ட பதார்த்தங்களைத் தானம் செய்தால் நரகத்தை அடைகிறான். ஆகவே நல்ல வஸ்துக்களையே தானம் செய்ய வேண்டும்.***

# 3. கெட்ட தானத்தினால் நரகப் பிராப்தி !

**அனந்தா நாம தே லோகா: தான் ஸ கச்சதி தா ததத் ।**

**காடகோபநிஷத் 1-1 - 3**

***உபயோகமற்ற பசுக்களைத் தானம் பண்ணக் கூடியவன் அனந்தங்கள் , என்கிற லோகங்களுக்குப் போகிறான்.***

காடகோபநிஷத்தில் வருகிற ஒரு கதை. வாஜச்ரவஸ் என்னும் முனிவர் ஒரு யக்ஞத்தைப் பரிபூர்ணமாக முடிப்பதற்காக அதில் பங்கு கொண்ட வேத வித்வான்களுக்கு, பலமற்ற மற்றும் வயதான மாடுகளைத் தானம் செய்து கொண்டிருந்தார். அதைக் கண்ட அவரது மகனான நசிகேதன், கெட்டதானத்தினால் நரக பிராப்தி என்பதை தந்தைக்கு விளக்கினான்.

தானம் செய்யும் பொழுது நம் மனம் சுத்தமாக இருக்க வேண்டும். தானம் செய்யப்படும் பொருட்களும் உயர்வானவையாக இருக்க வேண்டும். அன்புடனும், மகிழ்ச்சியுடனும், மனப்பூர்வமாகவும் தானம் செய்ய வேண்டும்; இடம், காலம் மற்றும் பாத்திரங்களை அறிந்தும் தானம் செய்ய வேண்டும். அப்பொழுது தான் செய்த தானத்திற்குப் பலன் கிட்டும். அவ்வாறில்லாமல் ஸத்பாத்திரர்களுக்கு உபயோகமற்ற பொருட்களைத் தானம் செய்தால், செய்தவனுக்குப் பலன் கிடைக்காதது மட்டுமின்றி நரகமே கிடைக்கும். 'தினை விதைத்தவன் தினையே அறுப்பான்' அல்லவா !

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்

இன்று எந்த நாயனார் கதை சொல்லப் போகிறீர் என்று கேட்க பொராணிகர் எறிபத்தர் என்னும் சிவனடியரைப் பற்றிக் கூறப்போகிறேன் என்று கூறி தொடங்கினார். அதீதமான பக்தியுடைவர்களாக பல சிவனடியார்கள் இருந்திருக்கிறார்கள். அதில் இவர் முதன்மையானவர்.

கரிகாற் சோழனின் வழிவந்த அநபாயச் சோழன் பல வளங்களை கொண்டதுமான கருவூரில் ஆட்சி செய்து வந்தான். அங்கேயே சிவனடியார்களுக்குத் தொண்டாற்றுவதை தன் வ்ரதமாகக் கொண்டிருந்தார் ஒரு சிவனடியார். அடியார் வருந்துமாறு ஏதேனும் அடாதச் செயல் நேரின் தன் கையில் வைத்திருக்கும் பரசு என்னும் கோடாலியால் அப்படிச் செய்தவரைக் கொன்று விடுவார். அதனால் இவருக்கு எறிபத்தர் என்னும் பெயர் சூட்டப்பட்டது.

அதே கருவூரில் சிவகாமி ஆண்டார் என்னும் அடியவர் இறைவனுக்காக அமைந்த பூஞ்சோலையில் பூக்களைக் கொய்து ஒரு கூடையில் கொணர்ந்து தொடுத்து சிவார்ப்பணம் செய்து வந்தார். வழக்கம் போலவே ஒரு அஷ்டமி அன்று அவர் பூக்களை பறித்து எடுத்துவந்து கொண்டிருந்தார். அதே சமயம் அரசப் பாகர்கள் பட்டத்து யானை 'பட்டவர்தனனை நீராட்டி அரண்மனைக்கு ஓட்டி வந்தனர். திடீரென்று அந்த யானை வேகமாக வந்து சிவகாமி ஆண்டாரின் பூக்கூடையை மண்ணில் வீசியது. பாகர்களை மீறி ஓடியது. தன் கைத்தடி கொண்டு அதை அடிக்க முயன்றார். மூப்பு காரணமாக முடியவில்லை. சிவனே ! சிவனே என்று கதறினார்.

இவரது கதறல் எறிபத்தர் காதில் விழ சினந்தார். நிலமையை அறிந்தார். சிவனடியாருக்கு செய்த அபசாரத்தைப் பொறுக்காமல் யானை சென்றவழியை அம்மையாரிடம் கேட்டார்.

இனி இந்த யானை பிழைக்காது என்று கூறி வேகமாக ஓடினார். மதம் பிடித்தாற்போல் அந்த யானையும் இவரைத் தாக்கியது. சற்றும் தயங்காமல் தன் மழுவால் அதன் கரத்தைத் துண்டித்தார். உடனிருந்த பாகர்களையும் மழுவால் வெட்டிக் கொன்றார். இந்தச் செய்தி அரசனுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவனுக்கு கோபம் வந்தது. அரசவை கூடிற்று. பெரும் ஆயுதங்களோடு அனைவரும் அரசனுடன் விரைந்தனர். எதிரி நாட்டு அரசனுக்குத்தான் பட்டத்து யானையைக் கொல்ல துணிவு உண்டு என்று நினைத்த

அரசன் மழு ஏந்திய சிவனடியாரையும் இறந்த பாகர்களையும் யானையையும் கண்டு வியப்புற்றார்.

இவர்தான் பட்டத்து யானையைக் கொன்றவர் என்று எறிபத்தரை சிலர் காட்ட அரசன் 'ஏதோ பிழை நிகழ்ந்தாலன்றி இப்படி நடக்காதே என்று யோசித்தான். அவரிடம் அரசன் நடந்தது என்ன என்று வினவ அவரும் சிவனடியாருக்கு உன் பட்டத்து யானையால் தீங்கு நேர்ந்தது, அதனால் வந்த விபரீதமிது' என்றார். மிகவும் மனம் நொந்தான் அரசன்.

இந்த தகாதச் செயலுக்கு அவர்கள் மட்டும் தண்டனைக்குரியவர் அல்லர். நானும் இதில் தொடர்பு உடையவன் தான் என்னையும் கொல்லும். உங்கள் புனித மழுவால் அல்ல. என் வாளால் கொல்லும்' என்றார். மன்னனின் இந்தச் செயல் எறிபத்தரையும் இளக்கிவிட்டது. அரசே இந்த வாளால் என் உயிரைப் போக்கிக் கொள்வேன் என்று கூறி வாளை எடுக்க அரசனும் அதைத் தடுக்க ' உங்களுடைய பக்தியை உலகுக்குக் காட்டவே இந்த நாடகம் என்று அசரீரி எழுந்தது. யானை எழ பாகர்கள் எழ கூடையில் மலர்கள் நிரம்பின. அரசரும் எறிபத்தரும் ஒருவரை ஒருவர் வணங்கினர்.

சிவபெருமான் எறிபத்தருக்கு கயிலைக் கணத்தலைமை தந்து பெருமை சேர்த்தார் என்று பெரிய புராணம் ஓதும் என்று தன் உரையை முடித்தார் பௌராணிகர்.

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

டி. வி. ராமசாமிப் பிள்ளை சென்னை



'ஆரியந்தமிழோடு இசையானவன்' என்று அப்பர் பரம்பொருளைப் பாடுகிறார். நம் குரு நாதர் வேதங்களையும் திருமுறைகளையும் வளர்த்தது அறிந்த ஒன்றே.

முதன் முதலில் 1968 ஆம் ஆண்டு என் 17ஆவது வயதில் கல்லூரி மாணவனாக இருந்த போது காஞ்சியில் சிவாஸ்தானத்தில் அவர் இருந்தபோது அவரைப் பார்த்தேன். ஒளி மிகுந்த முகம் வள்ளலார் ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் போன்றோர்களின் படங்களில் மட்டும் நாம் பார்த்த ஒளிவட்டம் அவரைச்சுற்றி இருக்கக் கண்டேன்.

திருப்பதி செல்லும் பஸ்ஸைப் பிடிக்க உத்தரவு வாங்கி கொண்டு புறப்பட்டு விட்டேன். பத்து ஆண்டுகளுக்குப்பின் கர்னாடகாவில் ஹகரி என்னுமிடத்தில் பெரியவா முகாமிட்டிருந்தார்கள். அவரது ஸன்னிதானத்தில் நமஸ்கரித்து எழுந்தேன்.

தெய்வத்தின் கை அசைந்து ஆட்கொள்ளும் என்று எதிர்பார்த்தபோது மேலே உயர்ந்த கை இரண்டு என்று காட்டியது. 'இரண்டு நாளைக்குத் தங்கலாம். பின் ஊருக்குப் போகவேண்டும்' என்று தொண்டர் விளக்கம் அளித்தார். என் உற்சாகம் நொடிகளில்

கரைந்தது. இரண்டு நாட்கள் அங்கேயே த்யானம் செய்து வந்தேன். அப்போது அவரிடம் பயமும் பக்தியும் இருந்தன. பின்பு பக்தி மட்டுமே எஞ்சியது.'என் உளம் கவர் கள்வனிடம் எனக்கேது பயம்'.

அப்போது இருந்த பயத்தினால் அவர் கண் படாமல் ஒளிந்திருந்து தர்சனம் செய்து வந்தேன். ஒரு நாள் ஆற்றங்கரையில் குளித்துக் கொண்டிருந்தபோது குரு நாதர் வந்துவிட்டார். எனக்கோ அச்சம். அவரோ இன்னும் ஊருக்குப் போகவில்லையா ? என்று கேட்க நான் மௌனமாக இருந்தேன். அவர்களும் ஏதும் பேசவில்லை. இந்த வேடிக்கையைக் கவனித்த ஒரு பெரியவர் என்னிடம் விவரம் கேட்டார். நான் ஒரு டாக்டர் என்பதையும் என் மன நிலையையும் கூறினேன். 'நான் இங்கு இரண்டு மாதம் தங்கியிருக்க வந்துள்ளேன் என்னுடன் வா' என்று கூறி அவருடைய ரூமுக்கு அழைத்துச் சென்றார். பின்னாட்களில் என் வாழ்க்கையில் சைவத்திருமுறைகளின் ப்ரயோகங்களை உபயோகித்துப் பல அதிசயங்களைக் காண வழிகாட்டியாக இருந்த திருவாளர் டன்லப் க்ருஷ்ணன் தான் அவர்.

சிறிது நேரத்திற்குப்பின் பெரியவாளிடம் உத்தரவு வேண்டினார். பெரியவா எங்கே? என்று கேட்க ஹம்பிக்குப் போகிறேன் என்றார். பெரியவாளின் பின்னாலிருந்த பாலு என்னையும் போ என்று சைகையால் தெரிவித்தார். ஸ்வாமிகளிடம் நானுமிதைத் தெரிவித்தேன். அவர்களும் அங்கீகரிக்க டன்லப் க்ருஷ்ணனுடன் பயணித்தேன். ஸ்ரீசரணர்களின் உத்தரவுப்படி 12 திருமுறைகளையும் பாராயணம் செய்ய இரண்டு மாதம் தங்கப்போவதாயும் பிற சில விஷயங்களையும் கூறினார்.

ஹம்பி அடைந்ததும் துங்கா நதியில் ஸ்னானம் செய்து ஜலத்தினுள் உள்ள மஹாலிங்கத்தையும் தர்சித்தோம். பிற கோவில்களிலும் தரிசனம் செய்தோம். பெரியவாளை தரிசனம் செய்து அனுக்ரஹம் பெற்றவர்கள் நிறைய பேர். அதில் நானும் ஒருவனாக இருந்தாலும் அவர் எனக்கு அருள் செய்தது விசேஷமானது.

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
**டாக்டர். வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**

## கர்ண பர்வம்



*த்ரோணர் மடிந்தவுடன் யாரை அடுத்த ஸேனாதிபதியக்குவது என்ற நிலையில் ஒரு மனதாக கௌரவர்களால் கர்ணன் ஸேனாதிபதியாக்கப் பட்டான்.*

*சல்யன் சாரதியாக இருக்க தேரில் அமர்ந்த கர்ணன் பொலிவுடன் விளங்கினான்.*

*கௌரவர்களும் பாண்டவர்களும் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்து பூமியை*

*ரத்தச் சேறாக்கினர். காண்டீபத்தை மீட்டு தன் பராக்ரமத்தை பூமியில் விளங்கச் செய்தான் அர்ஜுனன். பீமன், அர்ஜுனனைக் காக்க அவனை பின் தொடர்ந்து சிம்ம நாதம் புரிந்தான். துச்சாசனனை நோக்கி வந்த பீமனை அவன் தைர்யத்துடன் எதிர்க் கொண்டான்.*

*பீமன் அரே துச்சாதனா! எந்த சபையில் பஞ்சாலியின் கூந்தலை எந்த உன் கரங்கள் இழுத்தனவோ, எவை ஆடையை களைந்து மான பங்கம் செய்ததுவோ, அந்த உன்*

செய்கைக்கு வட்டியும் முதலும் தரப்போகிறேன். பெற்றுக்கொள். இப்படிச் சொல்லிக் கொண்டே பீமன் க்ரோதம் கொப்பளிக்க தன் கதாயுதத்தால் அவனை அடித்து பூமியில் வீழ்த்தி அவன் கரங்களை வெட்டி எறிந்தான். அவனுடைய உடலை தூக்கி சுழன்று சுழன்று வந்தான்.

துர்யோதனன், கர்ணன், அஸ்வத்தாமன் இவர்கள் பார்க்கையிலேயே பீமன் 'துர்மதியான இவனுக்கு பதில் கொடுத்துவிட்டேன். அவனைக் காக்க வாருங்கள்' என்று கூறி அவன் கரங்கள் இரண்டையும் பிடுங்கினான். அவனுடைய நெஞ்சைப் பிளந்து ரத்தத்தைக் குடித்து கோஷமிட்டான் முதல் சபதம் முடிந்தது இரண்டாவது சபதமான துர்யோதன வதம் அடுத்ததாக நிகழும் என்று கூறி வெற்றிக் களிப்பில் நர்த்தனம் செய்தான்.

காலனே வந்துவிட்டானோ என்னும் அச்சத்தில் கர்ணன் ப்ரமையுடன் இருக்க அவன் தேரோட்டி 'அச்சம் தவிர். நீயும் தளர்ந்தால் துர்யோதனன் என்ன செய்வான். உன் மீது பெரும் நம்பிக்கை வைத்துள்ளான்.போரிடு. வெற்றி வந்தால் பெரும் கீர்த்தி, தோல்வியானால் வீர ஸ்வர்க்கம்' என்று கூற கர்ணனும் கோபத்துடன் அர்ஜுனனை நோக்கி விரைந்தான். பெரும் வீழ்ச்சியையைப் பார்த்த அஸ்வத்தாமன் துர்யோதனனிடம் பாண்டவர்களுடன் விரோதம் வேண்டாம், சமாதானம் செய்து கொள்' என்று கூற அவன் அதை அலக்ஷியம் செய்தான்.

முனிவர் அந்த துர்மதி, பீமன் உங்கள் முன்னிலையிலேயே என்ன சொன்னான் என்று அறிவீர். அதனால் எப்படி சமாதானம் வரும்?' என்று கூறி வீரர்களே ஓடுங்கள், பாய்ந்து தாக்குங்கள் என்று கட்டளையிட்டான். அதன்பின் கர்ணனுக்கும், அர்ஜுனனுக்கும் பெரும் போர் மூண்டது.

அர்ஜுனனினின் தலையைக் கொல்ல தன் கையில் வைத்திருந்த அதி பயங்கரமான ஸர்ப்ப முகத்தை உடையதுமான அஸ்த்ரத்தை அவன் மீது கர்ணன் ஏவினான்.

தன்னைக் கொல்ல வரும் அஸ்த்ரத்தைப் பார்த்த பார்த்தன், க்ருஷ்ணா என்று அலற தன் ஸாமர்த்யத்தால் தேரை பூமியின் கீழே அழுத்த அஸ்த்ரம் அர்ஜுனனின் மகுடத்தை சீவியது. மீண்டும் ஒரு திவ்யாஸ்த்ரத்தை அர்ஜுனன் மீது கர்ணன் ஏவினான். அதே சமயத்தில் கர்ணனின் ரதம் சேற்றில் சிக்கியது.

# சிவ மானஸிக பூஜை

ஸதாசிவ ப்ரம்மேந்திரர் அருளியது

எங்கும் இருக்கும் பரமாத்வான சிவனை ஒரு ரூபத்தில் எப்படி பூஜிப்பது என்ற திகைப்பில் எழுந்த ஸ்லோகங்கள் ப்ரம்ம ஞானியான ப்ரம்மேந்த்ரர் தன் அனுபூதியில் அருளியது



स्पुरति हि सर्पाभरणम् सर्वान्गो सर्वमन्गलाकार
अतिवर्णास्रमिणस्ते अस्त्युपवीतिनेह क;
स्विदुत्कर्षः ॥ ६ ॥

ì ¦µv î é ºÁõ£µ n ® é ºÁõ [ ÷P
é ºÁ© [ P»õPõµ
Av Áº n õ ì µª s ì ÷u
A ì z ² £Ã÷u÷Ú í P; ì Â x zPº å:
» 6

*பார்வதியை தேஹத்தில் உடையவனே! (எல்லா மங்களங்களும் அமைந்த வடிவு உடையவனே ஸர்ப்பாரனம், உடலெங்கும் மின்னுகிறதே, வர்ணாஸ்ரம நெறிகளை கடந்தவனே இங்கே உனக்கு பூணுல் எந்த மேன்மை உண்டு?*

गन्ध्वती हि तनुस्ते गन्धा: किम् नेश पौनरुक्थ्याय
पुष्करपलदातारम् पुष्करकुसुमेन पूजये किम् त्वाम् ॥ २ ॥

P¢uÁw î uÝ ì ÷u P¢uõ: Q® ÷|\ ö£ÍÚ ¸Uz¯õ¯
¦èPµ £» uõuõµ® ¦èPµ Séú÷©Ú §á÷¯ Q® zÁõ® »

*ஈஸ்வரனே உன் உடல் கந்தமுடையது அன்றோ! வாசனை த்ரவ்யங்கள் மிகை அல்லவா புஷ்கலமான (நிரம்பிய) பலனையளிக்கும் உன்னை புஷ்கர மென்னும்*

*(தாமரைப்பூவாலே) நான் பூஜிப்பதா? (புஷ்கரம் நிறைவு தாமரை பழம் பயன். முதிர்ந்து தானே பழமாகும் பழத்தைகொடுப்பவனுக்குப் பூவைக் கொடுப்பதா! என்பது கருத்து.*

शमघ्नमूलधनम्ब त्वम् सकलेश्वर भवसि धूपित: केन

दीप: कथम् शिखावान् दीप्येत पुर: स्वयम्प्रकाशस्य ।। ८ ।।

\©uÚ‰»uÚ® zÁ® éP÷» ì Áµ£Á ê y¤u:÷PÚ

w£: Pu® ]PõÁõß w¨÷¯u ¦µ: ì Á¯®¨µPõé ì¯»

*எல்லோருக்கும் ஈஸ்வரனே, சமம் என்னும் செல்வத்தை தனமாகக்கொண்ட முனிவர்களுக்கு மூலதனமாக இருப்பவனே நீ யாரால் தூபம் காட்டப்பெற்றவனாக ஆகிறாய். ஸ்வயம் ப்ரகாசமாக இருக்கும் உனக்கு தீப ஆராதனை எப்படி ஜ்வாலை உள்ளதாயிருக்கும்?*

अम्रुतात्मकमपि भगवन्नशनम् किन्नाम नित्यत्रुप्तस्य

त्वय्याम्रेडितमेतत् ताम्बूलम् यदिह सुमुखरागोपि ।। ९ ।।

A®¸uõzP©¤ £PÁßÚ\Ú®QßÚõ©{z¯z¸¨uì¯

zÁ´¯õ®÷µ]u÷©uz uõ®§»®¯v í éú•Pµõ÷Põ¤»

*ஈஸ்வர! அமுதமான உணவாயினும் நித்யத்ருப்தனான உனக்கு ஏனோ சிவந்த வாயுடையவனெ இந்த தாம்பூலம் பயனற்ற மிகைப்பொருளே.*

उपहारीभूयादिदमुमेश यन् मे विचष्टितम् अशेषम्

नीराजयामि तमिम् नानात्मानमब सहाखिलै: करणै: ।। ५ ।।

E£í õŸ§¯õvu®E÷©é ¯ß÷© Â÷\è iuÂ÷\å®

}µõá¯õª uª® |õÚõz©õÚ® é í õQø»:Pµø n: »

*உமாபதியே ! என்னால் செய்யப்பட்டதாகிய இது முழுவதும் உனக்கு வழிபாடாக அமையட்டும். பலவடிவங்களை உடையவனான உமக்கு மெய், வாய், மனம் என்னும் மூன்று கரணங்களால் நீராஜனம் காட்டுகிறேன்.*